www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு 26 ஆவது மாநில மாநாடு 2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

மலர் 88 இதழ் 15 | 2025 ஜூலை 13 - ஜூலை 19 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15




# 25 கோடி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

## மோடி அரசின் கார்ப்பரேட் சார்பு கொள்கைகளுக்கு எதிராக ஆவேசம்

**தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்திருந்த நாடு தழுவிய பொது வேலைநிறுத்தம் ஜூலை 9 அன்று பெரும் எழுச்சியுடன் நடைபெற்றது. மோடி அரசின் கார்ப்பரேட் சார்பு கொள்கைகளுக்கு எதிராக நாடு முழுவதும் 25 கோடி தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, அரசியல் விழிப்புணர்வை வெளிப்படுத்தினர்.**

நாட்டின் முக்கியத் துறைகளான சுரங்கம், எஃகு, அலுமினியம், நெசவு, பெட்ரோலியம், வங்கி, அஞ்சல், போக்குவரத்து, கட்டுமானம், துறைமுகம் உட்பட அனைத்துத் துறைகளிலும் வேலைநிறுத்தம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் உற்பத்தி இழப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கேரளாவில் பொது வேலைநிறுத்தம் “முழு அடைப்பு” நிலையை எட்டியது. கடைகள், வணிக நிறுவனங்கள் மூடப்பட்டு, மாநிலத்தின் அனைத்து நடவடிக்கைகளும் முடங்கின. கேரள உயர்நீதிமன்றத்தின் தடையையும் மீறி, கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மேற்கு வங்கத்திலும் வேலைநிறுத்தம், முழு அடைப்பாக மாறியது.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

பீகாரில் பொது வேலைநிறுத்தம் முழு அடைப்புப் போராட்டமாக மாறியது. இடதுசாரிக் கட்சிகள் முதல் காங்கிரஸ், ராஷ்டிரீய ஜனதாதளம் வரை அனைத்துக் கட்சிகளும் முழு அடைப்பில் பங்கேற்றன. ஒன்றிய பாசிச பாஜகவுக்கு எதிரான ஒற்றுமையை பறைசாற்றும் வகையில் அமைந்திருந்தது. பாட்னாவில் நடைபெற்ற பிரமாண்ட பேரணியில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பீகார் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, சிபிஐ (எம்எல்) விடுதலை பொதுச்செயலாளர் தீபங்கர் பட்டாச்சார்யா மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

# எதை மீட்கிறீர் எடப்பாடியாரே?

## மாநிலச் செயலாளர் முத்தரசன் அடுக்கடுக்காகக் கேள்விகள்



**பெரம்பலூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு நடைபெற்றது. அதில் பங்கேற்க வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.**

எடப்பாடி பழனிசாமி நடத்தும் பிரச்சார யாத்திரை குறித்த கேள்விகளை ஊடகவியலாளர்கள் கேட்டனர். எதிலிருந்து தமிழ்நாட்டை எடப்பாடி மீட்கப் போகிறார்கள்? என்று அடுக்கடுக்கான கேள்விகளை இரா. முத்தரசன் முன்வைத்தார். அதன் விவரம் வருமாறு:

முன்னாள் முதலமைச்சரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி அவர்கள் ‘தமிழகத்தை மீட்போம்’ என்ற தலைப்பில் ஒரு பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார்.

எதை மீட்கப் போகிறார் என்பதை இந்தக் கூட்டங்களில் அவர் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

**தமிழ்நாட்டுக்கான மாநில உரிமைகளை ஒன்றிய அரசு தொடர்ந்து பறித்து வருகிறது. இவை பற்றி அந்தப் பிரச்சாரத்தில் அவர் என்ன சொல்லப் போகிறார்?**

### தேசியக் கல்விக் கொள்கை

தேசியக் கல்விக் கொள்கையைக் கட்டாயமாக ஏற்க வேண்டும் என்று ஒன்றிய அரசு நிர்பந்தம் செய்கிறது. தமிழகம் அதை ஏற்க முடியாது என்று கூறுகிறது. பாடத் திட்டமே, ஆர்.எஸ்.எஸ்.ஸின் இந்துத்துவக் கொள்கைகளுக்கு ஏற்பத் திருத்தப்படுகிறது.

ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை ஆண்டுத் தேர்வு உண்டு. ஆனால் மதிப்பெண்கள் அடிப்படையில் யாரையும் தோற்கச் செய்வது கிடையாது. சிறுவயதிலேயே கல்வியில் தோற்று விட்டோம் என்ற உணர்வுக்கு ஆட்பட்டு, கல்வி கற்பதிலிருந்து விலகி நின்று விடக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் இந்த முறை கடைபிடிக்கப்படுகிறது. எடப்பாடியின் ஆட்சியிலும் இப்படித்தான் இருந்தது.

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையின்படி, மூன்றாம் வகுப்பிலேயே பொதுத் தேர்வு எழுத வேண்டும். அதில் வெற்றி பெற்றால்தான் நான்காம் வகுப்பு. அடுத்து ஐந்தாம் வகுப்பில், பிறகு எட்டாம் வகுப்பில், அதையடுத்து பத்தாம் வகுப்பில், மறுபடி பன்னிரண்டாம் வகுப்பில் பொதுத் தேர்வுகளை எழுதியாக வேண்டும்.

12ம் வகுப்பில் தேர்வு பெற்று நல்ல மதிப்பெண்கள் வாங்கினாலும் கூட, மறுபடியும் நீட் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். அப்போதுதான் மருத்துவக்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# 25 கோடி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் – முதல் பக்கத் தொடர்ச்சி







தெலுங்கானாவில் வேலை நிறுத்தம் தீவிரமாக நடைபெற்றது. சிங்கரேணி நிலக்கரி நிறுவனம், மேடக் ஆயுதத் தொழிற்சாலை, சார்மினார் மதுபான ஆலை போன்றவற்றிலும் முழு வேலைநிறுத்தம் நடைபெற்றது.

நிலக்கரி இந்தியா லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களிலும், சத்தீஸ்கரில் பாரத் அலுமினியம் லிமிடெட், திருச்சி, ராணிப்பேட்டை பெல் நிறுவனங்கள் ஆகியவற்றிலும் முழு வேலைநிறுத்தம் நடைபெற்றது. மும்பை சியட் (CEAT) டயர் தொழிற்சாலை உற்பத்தியை நிறுத்தியது. கொல்கத்தா, தூத்துக்குடி, கொச்சி, பாரதீப் துறைமுகங்களில் வேலைநிறுத்தம் நடைபெற்றது. நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள், காப்பீட்டு ஊழியர்கள், அரசு ஊழியர்கள் பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டில் பெரும் வெற்றி

தமிழ்நாட்டில் ஒரு கோடி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களுக்கு ஆதரவாக மாநிலம் முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம், சாலை மறியல், ரயில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. தலைநகர் சென்னையில், அண்ணா சாலை அஞ்சல் நிலையம் அருகே தொழிற்சங்கங்கள் சார்பில் மறியல் நடைபெற்றது. இதில் எம்.ராதாகிருஷ்ணன் (ஏஐடியுசி), அ.சவுந்தரராசன் (சிஐடியு), கி.நடராசன் (தொமுச), ராஜாஸ்ரீதர் (எச்எம்எஸ்) உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அண்ணாசாலையில் உள்ள எல்ஐசி அலுவலகம் முன்பு வங்கி காப்பீட்டு ஊழியர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத் தலைவர் சி.எச்.வெங்கடாச்சலம் அகில இந்திய காப்பீட்டு ஊழியர் சங்கத் தலைவர் வி.ரமேஷ் பங்கேற்றனர். அரசு ஊழியர் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோவும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றது. மறியல் போராட்டங்களின் போது, பல இடங்களில் காவல்துறையினர் கெடுபிடி காட்டியதுடன், காட்டுமிராண்டித்தனமாகவும் நடந்து கொண்டனர்.

### புதுச்சேரியில் வேலைநிறுத்தம் வெற்றி

புதுச்சேரியில் வணிக நிறுவனங்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் முழுமையாக அடைக்கப்பட்டன. ஆட்டோ, டெம்போ, தனியார் பேருந்துகள் ஓடவில்லை. நகரத்தின் உள்ள குபேர் அங்காடி, சின்ன மணிக்கூண்டுமார்க்கெட் மூடப்பட்டிருந்தன. தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. திரையரங்குகளில் இரண்டு காட்சிகள் ரத்து செய்யப்பட்டன. பிஎஸ்என்எல், எல்ஐசி, அஞ்சல் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதால் அந்த அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன,

புதுச்சேரி புதிய பேருந்து நிலையம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சலீம், மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம், முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, திமுக மாநில அமைப்பாளர் சிவா, சிபிஎம் மாநிலச் செயலாளர் எஸ்.ராமச்சந்திரன் உள்ளிட்ட தலைவர்களும் கலந்துகொண்டனர். இதேபோன்று பல்வேறு பகுதிகளில் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.

ஜூலை 9 பொது வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் எழுச்சியாகும். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, கொல்கத்தா முதல் மும்பை வரை, ஒரே நேரத்தில் 25 கோடி தொழிலாளர்களின் போர்க்குரல் ஒலித்திருக்கிறது. அரசியல் விழிப்புணர்வை வெளிப்படுத்தியிருக்கிறது.

**மணிமாறன்**

### தமிழ்நாட்டில் ஒரு கோடி தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

தமிழ்நாட்டின் மத்திய,மாநில அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள், வங்கி, இன்ஸ்யூரன்ஸ், தபால்,தொலை தொடர்பு, பிஎச்இஎல், கல்பாக்கம் அணுமின் நிலையம், என்எல்சி, துறைமுகம், தொழிலாளர்கள், மின்சாரம், கூட்டுறவு நிறுவனங்கள், டிஎன்சிஎஸ்சி, கூட்டுறவு வங்கி, டாஸ்மாக், தனியார் தொழிற்சாலைகள், கட்டிடம், பீடி, ஆங்கன்வாடி, ஆஷா, மதிய உணவு, வீட்டுத் தொழிலாளர்கள், மீனவர்கள், தெரு வியாபாரிகள், அரசு போக்குவரத்து, தனியார் போக்குவரத்து, ஆட்டோ, டாக்ஸி தொழிலாளர்கள் பெருமளவில் பங்கேற்றுள்ளனர். பல்வேறு பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

திருப்பூர், கோவை உள்ளிட்ட பல நகரங்கள் ‘பந்த்’ போன்று வெறிச்சோடி உள்ளன. மாவட்ட, வட்ட, ஒன்றிய தலைநகர்களிலும், நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் நூற்றுக்கணக்கான மையங்களில் மறியல், ஆர்ப்பாட்டங்கள் போன்ற போராட்டங்களில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் அமைப்புகள் சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) மக்கள் அமைப்புகள், உள்ளிட்ட ஒரு கோடி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றுள்ளனர்.

நூற்றுக்கணக்கான மையங்களில் மறியல், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. மூன்று லட்சம் பேர் இப் போராட்டங்களில் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக போர்ப் பரணி பாடியுள்ளனர். திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் திருச்செந்தூர், நெல்லையப்பர் ஆலய திருவிழாக்களை ஒட்டி பக்தர்கள் நலன் கருதி போக்குவரத்து இயக்கப்படுகிறது. தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மகத்தான தேசபக்த போராட்டத்தில் பங்கேற்று, ஆதரவளித்து பொது வேலை நிறுத்தம் தமிழ்நாட்டில் பெரும் வெற்றி பெற துணை நின்ற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

இவ்வாறு ஏஐடியுசி பொதுச் செயலாளர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.










### இராமநாதபுர மாவட்ட மாநாட்டு படங்கள்







கட்சிக் கடிதம் நடுப்பக்கத்தில்...

# சமூக அநீதிகளை மீண்டும் உள்நுழைக்கும் சதி!



டி. ராஜா

**இந்திய அரசியலமைப்பின் 75வது ஆண்டுவிழா நிகழ்ந்த நேரம்! “சமயச்சார்பற்ற” (secular) மற்றும் “சோசலிச” (socialist) என்ற சொற்களை அரசியலமைப்பின் முன்னுரையில் சேர்த்தது சரிதான் என உறுதிப்படுத்திய உச்ச நீதிமன்றம், இந்தியக் குடியரசின் அடிப்படைத் தன்மையை மீண்டும் வலியுறுத்தியது.**

1976ல் நெருக்கடி நிலையின் போது இந்திரா காந்தி அரசால் 42வது திருத்தச் சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்ட இந்தச் சொற்கள், வலதுசாரிகளின் அரசியல் மற்றும் சட்டத் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன. இந்தச் சொற்களைச் சேர்த்ததை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்களை நிராகரித்த உச்சநீதிமன்றம், 1949 நவம்பர் 26ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அசல் முன்னுரையில் இந்தச் சொற்கள் இல்லை என்ற காரணத்துக்காக, அவற்றைச் சேர்த்ததைச் செல்லாது என்று கூற முடியாது எனத் தீர்ப்பளித்தது.

இந்தச் சொற்கள் சேர்க்கப்பட்டதை மறு உறுதிப்படுத்திய தீர்ப்பு அவர்கள் எழுப்பிய வாதத்துக்கு முடிவை எழுதியது. ஆனால் பாஜகவின் கருத்தியல் முதுகெலும்பான ஆர்.எஸ்.எஸ், அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்பட்ட இந்தியா எனும் கருத்தாக்கத்தின் மீது ஒரு புதிய தாக்குதலைத் தொடங்கியது. ஆர்.எஸ்.எஸ் செயலாளர் தத்தாத்ரேயா ஹோசபாலே “சமயச்சார்பற்ற” மற்றும் “சோசலிச” என்ற வார்த்தைகளை முன்னுரையில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை மறுபடியும் எழுப்புகிறார். அவரின் கூற்றுப்படி, இவை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் அரசியலமைப்பு பார்வைக்கு அந்நியமானவை.

இந்தியத் துணைத் தலைவர் ஜகதீப் தங்கர் இன்னும் ஒரு படி இறங்கி, இந்தச் சொற்களைச் சேர்ப்பதை “சனாதனத்தின் ஆன்மாவுக்கு அவமானம்“ என்று குறிப்பிட்டார். இந்த அறிக்கைகள் நாட்டின் மிக உயர்ந்த அலுவலகங்களில் இருந்து வெளியாகின்றன என்பது ஏதோ தற்செயலானது அல்ல. இது ஒரு அறிவார்ந்த விவாதமே அல்ல. இது


THE CONSTITUTION OF INDIA

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression, belief, faith and worship;

EQUALITY of status and of opportunity;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity of the Nation;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

நவீன, பன்முக, ஜனநாயக இந்தியக் குடியரசின் சட்டபூர்வத்தன்மையை மடை மாற்றி, மீண்டும் ஏற்றத்தாழ்வுள்ள சமூகக் கட்டமைப்பு முறைமையை நிலைநாட்ட வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட ஒரு அரசியல் உத்தியாகும்.

## விளிம்பிலிருந்து முதன்மை நிலைக்கு ஒரு திட்டம்

அரசியல் சாசனம் வடிவமைக்கப்பட்ட போது, இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்ற கருத்தை அரசியல் நிர்ணய சபை உறுதியாகவும் ஒருமனதாகவும் ஆதரித்தது. ஒரு மதம் சார்ந்த இறையியல் அரசை ஒரு உறுப்பினர் கூட வலியுறுத்தவில்லை. இந்தியாவின் கருத்து பன்முகத்தன்மையில் ஒற்றுமை, காலனியப் பிரித்தாளும் கொள்கையையும், எந்தச் சாதியும் மதமும் மேலாதிக்கம் செய்வதையும் நிராகரித்தல் என்ற அடிப்படைகளின் மீது எழுப்பப்பட்டது. இந்த ஒருமனதான இந்தியா என்ற கருத்தாக்கத்தை இடித்து நொறுக்கவும், இந்துராஷ்டிரா என்ற கருத்தைத் திணித்து அரசியல் சாசனத்தைச் சிதைக்கவும் ஆர்.எஸ்.எஸ் பாஜக பெரும்பாடு படுகிறது. ஒரு ஓரமாக நின்று கதைத்துக் கொண்டிருந்த நிலை மாறி, இப்போது இந்தத் திட்டம் அரசியல் முதன்மை நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டது. அயோத்தியில் ராமர் கோவில் சிலை நிறுவப்பட்ட நாளில், பிரதமர் நரேந்திர மோடி “ராமன் என்றால் அரசு, கடவுள் என்பது நாடு” என்று ஒருமைப்படுத்தி, அரசியல் சாசனத்தில் அடிப்படைகளைத் தகர்க்கும் தூண்டுதலை வழங்கினார். மதத்தையும் அரசையும் இவ்வாறு ஒன்றிணைப்பது, அரசியல் சாசனத்தை வடித்தவர்களின் எச்சரிக்கைகளைப் புறம் தள்ளி விலகிச் செல்வதாகும்.



“மதச்சார்பின்மை அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பின் ஒரு பகுதி. அதனை நாடாளுமன்றத்தால் கூட மாற்ற முடியாது” என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு நேர் எதிரானது.

## தலைவர்களும் அவர்களின் எச்சரிக்கைகளும்

நமது தேசியத் தலைவர்களின் எச்சரிக்கைகள் இன்று மேலும் பலத்துடன் ஒலிக்கின்றன. 1931ல், அடிப்படை உரிமைகள் தீர்மானத்தில், அரசு மத விஷயங்களில் நடுநிலையாக இருக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார். டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரும் “அரசு எந்த மதத்தையும் அரசு மதமாக அங்கீகரிக்கக்கூடாது” என்று குறிப்பிட்டார்.

இன்னொரு வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காமல் விலகி நின்ற, மதச்சார்பற்ற தேசியத்தை எதிர்த்த இந்து மகாசபை, 1944ல் தனது “இந்துஸ்தான் ஃப்ரீ ஸ்டேட் ஆக்ட்”ல் இதேபோன்ற விதியைச் சேர்த்தது.

அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்கள், விடுதலை பெற்ற இந்தியாவின் அடிப்படைகளைக் கட்டமைத்த தலைமுறையின் நோக்கத்தை நன்றாக விளக்குகின்றன.

1947 ஆகஸ்ட் 27ல், கோவிந்த் வல்லப பந்த் ஒரு நேரடியான கேள்வியை எழுப்பினார்: “உண்மையான தேசிய, சமயச்சார்பற்ற அரசு வேண்டுமா அல்லது மதம் சார்ந்த அரசு வேண்டுமா?” இந்தியா மதச்சார்புள்ள அரசாக மாறினால், அது ஒரு இந்து அரசாக மட்டுமே இருக்க முடியும் என்று எச்சரித்த அவர், அத்தகைய அரசியலில் இருந்து விலக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் பாதுகாப்பு பற்றிய கேள்விகளை எழுப்பினார்.

1949 நவம்பர் 21ல், ஜஸ்பத் ராய் கபூர், காந்தி தெளிவாக்கியதைக் குறிப்பிட்டார்: “மதம் ஒரு தனிப்பட்ட விஷயமாக இருக்க வேண்டும்.” நவம்பர் 22ல், பெகம் ஐசாஸ் ரசூல் மதச்சார்பின்மையை அரசியல் சாசனத்தின் “மிக முக்கியமான அம்சம்“ என்று அழைத்து, அது “களங்கப்படுத்தப்பட்டு விடாமல் பாதுகாக்கப்படும்“ என்று நம்பிக்கை தெரிவித்தார்.

1949 அக்டோபர் 14ல், சர்தார் வல்லபாய் படேல் இந்திய அரசியல் சாசனம் “சமூக அடிப்படையிலான எந்த விதிகளாலும் சிதைக்கப்படாது” என்று உறுதியளித்தார்.

நவம்பர் 23ல், டி.ஜே.எம்.வில்சன் இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு எதிரான அச்சுறுத்தல்கள் ஏற்கெனவே உருவாகி விட்டன என்று எச்சரித்தார். அவரது எச்சரிக்கை அச்சுறுத்துவதற்கானதல்ல. மாறாக ஆழ்ந்த புரிதலுடன் இருந்தன, இப்படி ஒரு சூழல் எழக்கூடும் என்பதை அன்றே முன்கூட்டி உணர்ந்து அந்த எச்சரிக்கையுடன் அரசியல் சாசனம் வரையப்பட்டது என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறது.

## எதிர்ப்பின் அவசியம்

அரசியல் சாசனத்தை மாற்றி அமைக்கும் முயற்சிகளை, மக்களிடம் விழிப்புணர்வு பரப்புரைகளைத் திறன்வாய்ந்த முறையில் செய்வதன் மூலமும், நீதிமன்றங்களில் சட்டபூர்வமாக எதிர்த்து வாதாடுவதன் மூலமும், அரசியல் இயக்கங்களை அணி திரட்டுதல், பெருமக்கள் திரள் ஜனநாயகப் போராட்டங்களில் மூலமும் நாம் எதிர்கொள்ள வேண்டும். அரசியல் சாசனம் என்பது ஒரு சட்ட ஆவணம் மட்டுமேயல்ல. இது நமது சுதந்திரப் போராட்டத்தின் உலைக்களத்தில் உருவான ஒரு அரசியல், சமூக மற்றும் தார்மீக ஒப்பந்தம். இது எண்ணற்ற தியாகிகள், புரட்சியாளர்கள் மற்றும் அரசியல் சாசனத்தை வடித்தவர்களின் கனவுகளை உள்ளடக்கியது, அவர்கள் அனைவருக்கும் சொந்தமான ஒரு இந்தியாவையே கற்பனை செய்தனர். இன்று மதச்சார்பின்மை மற்றும் சோசலிசத்தைப் பாதுகாப்பது என்பது ஜனநாயகத்தையே பாதுகாப்பதாகும். இது ஒவ்வொரு குடிமகனின் உரிமையை மதம், சாதி, வர்க்கம் அல்லது பாலினம் எதுவாக இருந்தாலும் கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரத்துடன் வாழ்வதைப் பாதுகாப்பதாகும். குடியரசைப் பாதுகாக்க வேண்டும், வளர்க்க வேண்டும். தேவைப்பட்டால், அதை உள்நாட்டிலிருந்து அழிக்க முயல்பவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும். அந்தத் தேவையை நிறைவேற்ற நாம் அச்சமற்றும், சிந்தனைத் தெளிவுடனும், கூட்டு உறுதியுடனும் நாம் கிளர்ந்து எழுந்தாக வேண்டும்.

நன்றி: ‘The Hindu’

தமிழில் டி.எம்.மூர்த்தி

# இராமேஸ்வரம் சென்னை முன்பதிவில்லா ரயில் இயக்க வேண்டும்

## இராமநாதபுர மாவட்ட மாநாடு வலியுறுத்தல்

இராமநாதபுரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாவட்ட மாநாடு பேரணியுடன் தொடங்கியது. மாவட்டச் செயலாளர் என்.எஸ். பெருமாள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என்.கே.ராஜன் முன்னிலை வகித்தார்.

கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் என்.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, தேசிய கவுன்சில் உறுப்பினர் தி.ராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, இந்திய தேசிய மாதர் சம்மேளனத்தின் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் எஸ்.பி.ராதா, திருவாடானை குருசாமி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே.ஜீவா, கே.ஆர்.சுப்பிரமணியன், சி.ஆர்.செந்தில்வேல், எஸ்.எம்.ஜெயசீலன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பிரதிநிதிகள் மாநாடு ஆர்.தர்மராஜன், எஸ்.எம்.ஜெயசீலன், பி.நாகராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை எஸ்.பி.ராதா ஏற்றிவைத்துச் சிறப்புரையாற்றினார். அஞ்சலி எஸ்.எம்.ஏசிலன் வாசித்தார். மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.தர்மராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். வேலை அறிக்கையினை மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பெருமாள் வாசித்தார். 34 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது.

மாவட்டச் செயலாளராக என்.எஸ். பெருமாள், மாவட்டத் துணைச் செயலாளர்களாக எஸ்.எம்.ஜெயசீலன், கே.ஜீவானந்தம் பொருளாளராக ஜி.லோகநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

திருப்புவனம் கோயில் பணியாளர் அஜித்குமார் காவல்துறையினரால் படுகொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதுடன், இனிமேலும் இதுபோன்ற படுகொலைகள் நிகழாவண்ணம் காவல்துறைப் பயிற்சியின் போது, மக்களிடம் எளிய முறையில் விசாரிப்பதற்கான அறிவியல் ரீதியாக, உளவியல் ரீதியாக விசாரிக்கும் வகையில் சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டும்.

100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் ஒன்றிய அரசு முறையாக வழங்க வேண்டிய நிதியினை உடனடியாக வழங்க வேண்டும். இராமநாதபுரம் மாவட்ட மருத்துவக் கல்லூரியில் அனைத்து வசதிகளும் செய்து தர வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பழுதாகியுள்ள அனைத்துச் சாலைகளும் சீர்படுத்த வேண்டும்.

சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் ராமேஸ்வரத்தில் இருந்து சென்னைக்குச் செல்கின்ற வகையில் பகல் நேர முன்பதிவில்லா ரயில் விட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 15

# யார் அடிமை?

எடப்பாடி பழனிசாமியார், தன்னிலை மறந்து, ஏதேதோ பிதற்றிக்கொண்டிருக்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திமுகவின் அடிமையாம்! பொதுவுடமைச் சித்தாந்தத்தை, கட்சியின் தலைவர்களை இழிவுபடுத்தி, எந்த மேடையில் பேசினாலும், ஒரு விநாடி நேரம் கூட அங்கு கம்யூனிஸ்டுகள் அமர மாட்டார்கள்.

திராவிடத்தை ஒழிப்போம், பெரியாரும் அண்ணாவும் துரோகிகள் என்று போஸ்டர் ஒட்டி காணொளி போட்டு மேடையில் பேசினார்களே! வெட்கமில்லாமல் உங்கள் தலைவர்கள் உட்கார்ந்திருந்தார்களே! யார் அடிமை?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேய்ந்து கொண்டிருக்கிறதாம்! முதல்வராக இருக்கும்போதே, தூத்துக்குடியில் 13 பேரைக் காவல்துறை சுட்டுக்கொன்ற போது, தொலைக்காட்சியில் பார்த்துத் தெரிந்து கொண்டேன் என்றாரே! நாள்தோறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் களத்தில் நின்று போராடிக் கொண்டிருப்பது பாவம் இவருக்கு எப்படித் தெரியும்?

தங்கள் கட்சியின் பெயரிலேயே இருக்கும் ‘திராவிடம்’ என்பது என்ன என்று ஆய்வாளர்களிடம்தான் கேட்க வேண்டும் என்று சொன்ன இவருக்கு, ‘கம்யூனிசம்’ என்றால் என்ன என்று எப்படிப் புரியும்? கற்பூர வாசனை தெரியவில்லையா என்றா கேட்க முடியும்?

பரப்புரையில், ‘நான் சொல்லக்கூடாது’ என்று சொல்லிக் கொண்டே, “தெய்வபக்தியோடு உண்டியலில் காசு போடுகிறீர்கள்! கோவிலை அபிவிருத்தி செய்வதற்காகத்தானே! அதை எடுத்துக் கல்லூரி கட்டி சதி செய்கிறார்கள்” என்று பேசியிருக்கிறார்.

2021 தேர்தலில் எடப்பாடியை மக்கள் ஆட்சியை விட்டு இறக்கினார்கள். அவர் முதலமைச்சராக இருந்தபோது இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் 44 மேல்நிலைப் பள்ளிகளும் 9 கல்லூரிகளும், ஒரு ஐடிஐ தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் செயல்பட்டு வந்தன. இது கூடத் தெரியாமல் எப்படி அவர் முதல்வராக இருந்தார்!

இதுவரை, கோவில் பணம், கல்லூரி என்றெல்லாம் அதிமுக பேசியது இல்லை. கல்வி கூடாது, கோவில்தான் வேண்டும் என்று பேசுவது சங்கிகள்தான். அதிமுகவின் பாரம்பரியங்களை எல்லாம் தூர எறிந்து விட்டு, தனது சுயநலத்துக்காக முழுச் சங்கியாக மாறி, காவித் துண்டை மட்டும் இடுப்பில் சுற்றிக்கொண்டு களத்தில் இறங்கி விட்டார்!

இவ்வளவுக்கும், இந்தியாவிலேயே அதிக கோவில்கள் உள்ளது தமிழ்நாட்டில்தான். அறநிலையத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 37,000 கோவில்களோடு சேர்ந்து 3,90,615 இந்துக் கோவில்கள் உள்ளன. குஜராத்தில் கோவில், சர்ச், மசூதி, குருத்துவாரா உட்பட 1,42,135 வழிபாட்டுத்தலங்கள் உள்ளனவாம். அங்கு அறநிலையத்துறை இல்லாததால் எத்தனை கோவில் எனும் கணக்கு கூடத் தெரியாது!

ஒன்றிய அரசு எதுவுமே கொடுக்கவில்லை என்று கீறல் விழுந்த ரெகார்ட் மாதிரி திரும்பத் திரும்ப தமிழ்நாடு அரசு சொல்லலாமா? என்கிறார் எடப்பாடி. அத்திக்கடவு அவிநாசி திட்டத்தை ஒன்றிய அரசிடம் கொடுத்து விட்டோம். ஏற்காமல் நிராகரித்து விட்டார்கள் என்று பேசியதும் அவரது வாயேதான்!

மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து, இந்திய விவசாயிகள் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடிக் கொண்டிருந்தபோது, நானும் விவசாயிதான், இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு நல்லது என்று கூச்சமே இல்லாமல் பொய் சொன்னவர் இவர்.

தமிழ்நாட்டின் நலன் பாதிக்கப்பட்ட போதெல்லாம், எம்ஜிஆர் அவர்களும், ஜெயலலிதா அம்மையாரும் ஒன்றிய அரசை எதிர்த்து விட்டுக் கொடுக்காமல் போராடி இருக்கிறார்கள்.

அவர்கள் காலத்திய ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு இழைத்த தீமைகளை விட, ஆயிரம் மடங்கு அதிகமாக மோடி அமித்ஷா ஆட்சி தமிழகத்துக்குத் துரோகம் செய்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு எக்கேடு கெட்டால் என்ன என்று, அண்ணாவைத் தூக்கிப் போட்டு விட்டு, அமித்ஷாவைத் தலைவராக ஏற்றுக்கொண்ட எடப்பாடி, ‘தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி வரும், முதல்வர் யார்? என்று டெல்லி தீர்மானிக்கும்’ என்று வெட்கமின்றிச் சொல்கிறார். தலைமைப் பதவியைத் தவழ்ந்து பிடித்தவருக்கு அந்தக் கட்சியின் வரலாறு தெரிந்திருக்காது.

அதிமுகவை எம்ஜிஆர் தொடங்கிய போது, அதனைத் தாங்கிப் பிடித்து வளர உதவி செய்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று மட்டுமே. அதே அதிமுக இன்று தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்யும் பாஜகவின் வாலாக மாறி இருப்பதற்காக வேண்டுமானால் கம்யூனிஸ்ட் கட்சி வருத்தப்படலாம்!

ஆர்.என்.ரவியை மாற்ற வேண்டாம் என்பது போலவே, எடப்பாடியும் இதேபோல பேசிக் கொண்டிருக்கட்டும். தமிழ்நாட்டுக்கும் திமுக கூட்டணிக்கும் மிகவும் நல்லது.

# எதை மீட்கிறீர் எடப்பாடியாரே? 1 ஆம் பக்கத் தொடர்ச்சி

கல்லூரியில், இன்ன பிற கல்லூரிகளில் இடம் கிடைக்கும். (பல லட்சக்கணக்கில் பணம் கொடுப்பவர்களுக்குப் பூஜ்ஜியம் மார்க் எடுத்தாலும் கிடைக்கும் என்பது வேறு விஷயம்).

படிப்படியாக மாணவர்களைக் கல்வியில் இருந்து வெளியேற்றும் சதி இதில் அடங்கி இருக்கிறது.

## மொழித் திணிப்பு

அது மட்டுமல்ல மூன்றாவதாக ஒரு மொழியைப் படிக்க வேண்டும் என்ற பெயரில் இந்தித் திணிப்பு நடக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பாஜக ஆளுகிற மகாராஷ்டிரா மாநிலத்திலேயே இந்தக் கல்வித் திட்டத்தை அமலாக்க முயன்று, மக்களின் கடும் எதிர்ப்பால் அதனை திரும்பப் பெற்றிருக்கிறார்கள். கூட்டங்களில் அவர் பேச வேண்டும்.

இந்த தேசியக் கல்வித் திட்டத்தை எடப்பாடி ஏற்கிறாரா? நிராகரிக்கிறாரா?

## கல்வி நிதி மறுப்பு

அது மட்டுமல்ல இந்தத் திட்டத்தை ஏற்க மறுத்ததால், தமிழ்நாட்டுக்குச் சேர வேண்டிய கல்வித் தொகை ரூபாய் 2000 கோடியை ஒன்றிய அரசு வழங்க மறுத்து வருகிறது. இதுவும் சரியானதுதான் என்று எடப்பாடி ஏற்கிறாரா? மறுக்கிறாரா?

இப்போது உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகள் குறைக்கப்படுகிற அபாயம் உள்ளது. இதுகுறித்து ஒன்றிய அமைச்சர்கள் மழுப்பலாகப் பேசுகிறார்கள் தெளிவாக எதையும் கூறுவதில்லை. தமிழ்நாட்டின் தொகுதிகள் குறைக்கப்படுவதை எடப்பாடி ஒத்துக் கொள்வாரா? அல்லது எதிர்ப்பாரா?

## கீழடி அறிக்கை

கீழடி அகழ்வாராய்ச்சி குறித்த அறிக்கை ஒன்றிய அரசுக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளாகியும் அதை வெளியிடவில்லை. தமிழரின் தொன்மையை நிரூபிக்கும் அந்த ஆய்வுகளை, போதிய அறிவியல் ஆதாரமில்லை என்று கூறி ஒன்றிய அரசு மறைக்கப் பார்க்கிறது. ஒன்றிய அரசின் செயலை எடப்பாடி ஏற்கிறாரா? அல்லது கண்டிக்கிறாரா?

மின் கட்டணத்தை தமிழ்நாடு அரசு உயர்த்துகிறது என்கிறார் எடப்பாடி. மோடி அரசு மின்சாரம் குறித்த ‘உதய்’ திட்டத்தைக் கொண்டு வந்த போது, இதை ஒப்புக் கொண்டால் தமிழ்நாட்டில் மின் கட்டணத்தை அடிக்கடி உயர்த்த வேண்டி இருக்கும் என்று சொல்லி ஜெயலலிதா கையெழுத்திட மறுத்தார். ஆனால் அவரது மறைவுக்குப் பின்பு எடப்பாடி முதலமைச்சர் பொறுப்பில் இருக்கும் போது, அந்தத் திட்டத்தை ஏற்று அவரது மின்சாரத்துறை அமைச்சர் தங்கமணி கையெழுத்திட்டார். மின் கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்கிய உதய் திட்டத்தில் தனது அரசுதான் கையெழுத்திட்டது என்பதை எடப்பாடி மறந்து விட்டாரா? மறைக்கிறாரா?

ஜெயலலிதா மறைவுக்குப் பின் எடப்பாடி தலைமையில் நடந்த ஆட்சி பாஜகவுக்கு அடிமை போல செயல்பட்டது. அப்போது ‘தமிழ்நாட்டை மீட்போம்’ என்று நாங்கள் பிரச்சாரம் செய்தோம். அந்த முழக்கத்தைத் தான் அவர் இப்போது கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார். சென்ற சட்டப்பேரவைத் தேர்தலில் தோற்ற பின்பு, இனி ஒருபோதும் பாஜகவுடன் கூட்டணி கிடையாது என்று இவரே சொன்னார். இப்போது மீண்டும் சேர்ந்து கொண்டார்.

ஏன் கூட்டணி சேர்ந்தார் என்பதையும் எடப்பாடி விளக்க வேண்டும். கொள்கைகளில் ஒற்றுமை வந்து விட்டதா? அல்லது வேறு காரணங்கள் உள்ளனவா?




## 100 நாள் வேலை

நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை தர வேண்டும் என்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. மோடி ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படுகிறது. பல காரணங்களைக் கூறி பயனாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. அதுமட்டுமின்றிக் குறைக்கப்பட்ட அந்த நிதியும் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படுகிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. இதற்கு எடப்பாடி உடன்படுகிறாரா? அல்லது எதிர்க்கிறாரா?

## சமஸ்கிருதம்

இந்தியாவில் அலுவல் மொழிகளாக தமிழ் உள்பட 22 மொழிகள் இருக்கின்றன. அவை அனைத்தையும் சமமாகப் பாவிக்க வேண்டும். சமஸ்கிருதம், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் தாய்மொழி அல்ல. மக்களால் பேசப்படக்கூடிய மொழியும் அல்ல. ஆனால் பல கோடிகணக்கானவர்கள் பேசுகிற தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளுக்கு ஒதுக்கப்படும் தொகையைவிடப் பத்து மடங்குக்கும் அதிகமாக சமஸ்கிருதத்துக்கு மொழி மேம்பாட்டு நிதி ஒதுக்குவது ஏன்? இந்தக் கேள்வியை எடப்பாடி கேட்பாரா? கேட்க மாட்டாரா?

## ஒரு ரூபாய்க்கு 29 பைசா

பிஜேபி ஆளுகிற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் தமிழ்நாடு போன்ற பிஜேபி ஆளுங் கட்சியாக இல்லாத மாநிலங்களில் நிதி ஒதுக்கீட்டைச் சுருக்கி அவற்றை பற்றாக்குறைக்கு ஆளாக்குகிறது. இந்த அநீதி பற்றி எடப்பாடி பேசுவாரா? பேச மாட்டாரா?

இயற்கைப் பேரிடர் நிதி என்று ஒன்று இருக்கிறது. அதற்கு தலைவரே பிரதமர் மோடிதான். தமிழ்நாடு இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட போது மோடி அரசு நிதி எதுவும் தரவில்லை. அப்போது எடப்பாடி தமிழ்நாட்டுக்கு நிதி தர வேண்டும் என்று கேட்டார். இப்போது அதைக் கேட்பாரா? கேட்க மாட்டாரா?

## தொகுதி எண்ணிக்கைக் குறைப்பு

தொகுதிகளை மறுவரையறை செய்வது என்பது பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு

## பொறுப்பு

நான் எப்போது வேண்டுமானாலும் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்பேன் என்கிறார் எடப்பாடி. தனது கட்சியின் அடிப்படைகளையே கொச்சைப்படுத்தும் ஒரு கட்சியுடன் கூட்டணி வைப்பதைக் குறித்து கேள்வி கேட்டால் பதில் சொல்வதற்கு ஒரு அரசியல் தலைவருக்குப் பொறுப்பு உள்ளதா? கிடையாதா?

## வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு

எங்கள் கூட்டணியின் ஒரே நோக்கம் திமுகவை ஆட்சியில் இருந்து அகற்றுவதுதான் என்கிறார்கள். தமிழ்நாட்டை மோடி அரசு வஞ்சிப்பதை எதிர்த்து திமுக போராடுகிறது. தமிழ்நாடு வஞ்சிக்கப்படுவதை எதிர்த்து திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் போராடுவதை எடப்பாடி தவறென்று சொல்கிறாரா? தானும் போராடுவாரா?

## மீட்பதா? மூழ்கடிப்பதா?

எந்தக் கட்சி தமிழ்நாட்டை வஞ்சிக்கிறதோ அதனுடனே கூட்டணி வைத்துக்கொண்டு, தமிழ்நாட்டை வர்ணாசிரமச் சிறைக்குள் தள்ளிவிட பின்னிருக்க எடப்பாடி முயல்வது தமிழ்நாட்டை மீட்பதா? அல்லது மூழ்கடிப்பதா?

**தொகுப்பு: டி.எம்.மூர்த்தி**

# டிரம்ப் மிரட்டல் அமெரிக்க வீழ்ச்சியின் வெளிப்பாடுகள்



மே.து.ரா.

**சீனாவின் எதிர்பாராத நுட்பு அறிவு வளர்ச்சியும் புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்தித் திறனும் முன்னேற்றமும் கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்காவின் மேன்மை நிலையினை அச்சுறுத்துவதாக அமைந்துவிட்டன.**

இவற்றைக் கட்டுப்படுத்த அல்லது தடுத்து நிறுத்த அமெரிக்கா தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

டிரம்ப்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் (2017 2020), சீனா, ரசியா ஆகிய நாடுகளுக்கு எதிராகப் பல முயற்சிகள் தொடங்கப்பட்டன.

ரசியாவின் வரவையும் ஈட்டலையும் தடுப்பதற்காக எண்ணெய் விலையினைக் குறைக்கும் வகையில், அமெரிக்காவில் எண்ணெய் உற்பத்தி மிகுவிக்கப்பட்டது. ஓபெக் அமைப்பில் முன்னிடத்தில் இருக்கும் சவுதி அரேபியாவும் ரசியாவும் இணைந்து தங்களது எண்ணெய் உற்பத்தி அளவையும் கூட்டின. இதனால், எண்ணெய் விலை 50 அமெரிக்க டாலருக்குக் குறைந்து, மிகு உற்பத்திச் செலவு கொண்ட அமெரிக்க நிறுவனங்கள் பேரிழப்பைக் கண்டன.

அமெரிக்க, அய்ரோப்பிய நுட்பங்களைக் கொண்டுதான் சீனா தனது உற்பத்தித் திறனை வளர்த்துக்கொண்டிருப்பதாக நம்பிய அல்லது நம்ப வைக்கப்பட்ட டிரம்ப், சீனாவுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமெரிக்காவிலிருந்து சிப்பி ஏற்றுமதி நிறுத்தப்பட்டது. சிப்பி உற்பத்திக்கான எந்திரங்களை உற்பத்தி செய்யும் டச்சு நாட்டுக்கு அழுத்தம் தந்து, சீனாவுக்கான ஏற்றுமதியை நிறுத்தச் செய்தார்.

## சீனாவின் நுட்ப வளர்ச்சி

ஆனால், சீனா உற்பத்திக்கு மட்டும் முதலிடம் தராமல், அறிவியல் நுட்ப வளர்ச்சிக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் முன்னிடம் கொடுத்துக் கடந்த 30 ஆண்டுகளாகச் செயல்பட்டுத் தனது நுட்ப அறிவைப் பெருக்கிக் கொண்டிருந்தது.

இதனால், 5ஜி உள்ளிட்டு, சிப்பி உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றங்களை எட்டியது. அமெரிக்காவில் உற்பத்தியாகும் சிப்பிகளில் 80%க்கும் மேல் சீனாதான் வாங்கிக் கொண்டிருந்தது. இதனால் அமெரிக்க நிறுவனங்கள் பல இழப்புகளுக்கு உள்ளாயின. இவையெல்லாம் ஒரு சில எடுத்துக்காட்டுகள்தாம். சின்னஞ் சிறிய நாடான வட கொரியாவினைத் தனிமைப்படுத்தி, அச்சுறுத்தி அடக்கிவிட முயன்ற டிரம்ப், பின்னர் மூன்று முறை வடகொரியத் தலைவர் கிம் சொங் உன் அவர்களைக் காண்பதற்காகப் பல நாடுகளுக்குப் பறந்து வரவேண்டியதாயிற்று.

## டிரம்ப்பின் உளறல்கள்

உண்மைக்கு மாறாக உளறுவதும், பின்னர் மாற்றிப் பேசுவதும், அச்சுறுத்துவதும், அடுத்து அடங்கிப் போவதும், டிரம்பின் சிறப்பு இயல்புகள் என்று வரையறுத்துவிடலாம்.

'மீண்டும் சிறப்பான இடத்துக்கு அமெரிக்கா' என்ற முழக்கத்தை முன்வைத்து டிரம்ப் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உலக அரங்கில் நகைப்பூட்டுவனவாக மாறிவருகின்றன. மீண்டும் முன்னிலை என்று கூறுவதே கீழ்நிலைக்கு வந்துவிட்டதை உறுதிப்படுத்துகிறது.

இவை டிரம்பின் தனிப்பட்ட இயல்புகள் என்று எடுத்துக்கொண்டாலும், அமெரிக்கா தனது அண்மைக் கால இழப்புகளை இட்டு நிரப்ப இயலாது குழப்பத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

ரசிய உக்ரைன் போர், இசுரேல் ஈரான் பூசல்கள், இறக்குமதி வரி குறித்த தாறுமாறான முடிவுகள் என அனைத்திலும் அமெரிக்காவின் கையறுநிலையினையே டிரம்ப் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

ஒரு நாடு உலக அரங்கில் முன்னிலை பெறப் பல மேன்மைகளைக் கொண்டிருக்கவேண்டும்.

1. அறிவியல் நுட்ப வளர்ச்சியுடன் புதிய கண்டுபிடிப்புகள்
2. உற்பத்தி மற்றும் பொருளிய வளர்ச்சி
3. நுட்பக் கருவிகளுடன் பொருந்திய படை வலிமை
4. பரந்த அளவிலான அரசியல் செல்வாக்கு.



இவை யாவும் இணைந்தால்தான், எந்த ஒரு நாடும் செல்வாக்கினைச் செலுத்த முடியும். இத்தகைய பெருமைகள் அனைத்தையும் தன்னகத்தே இன்று கொண்டிருப்பதாக சீனா, அமெரிக்கா, ரசியா ஆகிய நாடுகள் முன்னிற்கின்றன என்று கூறி விடலாம்.

இவற்றில், சீனா, ரசியா ஆகிய இரண்டையும் மிஞ்சி, அவற்றைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சியினைத் தடுத்து, அமெரிக்கா மட்டுமே முதல் நிலை பெறவேண்டும் என்கின்ற முயற்சிகளில்தான் அமெரிக்கா இறங்கியுள்ளது. அதன் வழியாகத்தான் பிற உலக நாடுகள் அனைத்தையும் அடக்கிக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றும் அமெரிக்கா நம்புகிறது. தனது பொருளிய வளத்துக்கு அடிப்படை வேண்டலாகவும் இதனைக் கருதுகிறது.

## அமெரிக்காவின் இயலாமை

கடந்த பல பத்தாண்டுகளாக முன்னிலையில் இருந்த அமெரிக்காவின் செல்வாக்கு அண்மையில் பெரிதும் சரிந்துவிட்டதை அறியலாம். அறிவியல் நுட்பங்களை மட்டும் தனித்து வைத்துக்கொண்டு உலக நாடுகளைக் கட்டுப்படுத்த இனியும் இயலாது என்பதைச் சீனாவும் ரசியாவும் இணைந்து காட்டி வருகின்றன. அதாவது, நுட்ப அறிவும் கண்டுபிடிப்புகளும் ஒரு நாட்டின் தன்னுரிமையாகத் தற்போது விளங்கவில்லை.

உலக வணிகத்தில் சீனாவின் பங்கு 2020இல் 14.7% என உள்ளது. ஆங்காங் பகுதியின் 3.1% வணிகத்தையும் சேர்த்தால், சீனாவின் பங்களிப்பு 17.8% ஆகிறது. ஆனால், அமெரிக்காவின் பங்களிப்பு 8.1% என எப்போதோ இறங்கிவிட்டது. சீனாவின் உலக வணிகப் பங்கில் பாதிக்கும் குறைவாக அமெரிக்கா எங்கோ தொலைவில் நிற்கிறது. ரசியா உலக வணிகத்தில் மேல்நிலையைப் பெறாவிட்டாலும், உணவு, எரிபொருள், படைக் கருவிகள் என அனைத்திலும் பெரும்பாலும் தன்னிறைவு பெற்றிருப்பதுடன், ஏற்றுமதியிலும் முன்னேறியுள்ளது. சீனா அல்லாமல் வேறு நாடுகளைப் பெரிதும் சாராமலும் உள்ளது. மேலும், வளங்கள் பலவற்றைத் தன்னிடத்தில் குவித்து வைத்திருக்கிறது.

படை வளத்தில் அமெரிக்கா, நேட்டோ உள்ளிட்ட அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள் இணைந்தும் ரசியாவை வெல்ல முடியாமல் தவிக்கின்றன. சீனாவில் படை நுட்ப வளர்ச்சி இப்போது மிகவும் பெருகிவிட்டது.

ஈரான் அணு அமைப்புகளின் மேல் அமெரிக்கா ஊடுறுவிப் பாயும் உயர்நுட்பக் குண்டுகளை வீசினாலும், அமெரிக்கப் படைக் கட்டமைப்புகளைத் திருப்பித் தாக்கும் வலிமையை ஈரான் பெற்றிருப்பதும் நிகழ்ந்திருக்கிறது.

## ரசிய, சீன நாடுகளின் அரசியல் செல்வாக்கு

அரசியல் அளவில், அமெரிக்காவின் செல்வாக்கு அய்ரோப்பிய ஒன்றிய நாடுகளோடும் கனடா, சப்பான், ஆத்திரேலியா போன்ற ஒரு சில நாடுகளுடனும் சுருங்கிவிட்டதைக் காண முடியும்.

உக்ரைன் போரினைப்படுத்து, அமெரிக்கத் தலைமையின் பொருளாதாரத் தடை அல்லது புறக்கணிப்பு என்பவற்றை ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆசிய நாடுகளில் பலவும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே இதனை உறுதி செய்கிறது. இந்தச் சூழ்நிலையில்தான், அமெரிக்காவை மீண்டும் முதல் நிலைக்குக் கொண்டுவர, இறக்குமதி வரியினை டிரம்ப் பயன்படுத்த முயற்சி செய்கிறார்.

உலக நாடுகளின் ஏற்றுமதி அல்லது இறக்குமதி என்பன அந்தந்த நாடுகளின் வேண்டல்கள் மற்றும் உற்பத்தி ஆற்றல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன. உள்நாட்டு உற்பத்தியைக் காக்க இறக்குமதி வரி போடுவதும், உள்ளூர் விலைகளைக் கட்டுப்படுத்த ஏற்றுமதி வரியைப் பயன்படுத்துவதும் பல்லாண்டுகளாக நடைமுறையில் உள்ளன.

## வணிக விதிகள்

ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு மிகு வரி போடுவதால் மட்டும் உள்நாட்டு உற்பத்தி பெருகிவிடாது. உள்நாட்டு உற்பத்திக்கான முதன்மைப் பொருள்கள், உழைப்பு நுட்ப ஆற்றல், கட்டமைப்பு, அரசியல் பங்களிப்பு போன்றன இருந்தாக வேண்டும். இவையெல்லாம் ஒரே நாளில் கிடைக்கக்கூடியனவல்ல. ஒப்பீட்டளவில் உற்பத்திச் செலவும் குறைந்திருக்கவேண்டும். இவையெல்லாம் இயற்கை விதிகள். இவற்றைப் புறக்கணித்து, டிரம்ப் எடுக்கும் நடவடிக்கைகளும் இறக்குமதி வரிகள் குறித்து அறிவித்துப் பணிய வைக்க முயற்சிப்பதும் தோல்விகளையே தழுவுகின்றன.

இறக்குமதியாகும் சீனப் பொருள்களுக்கு அமெரிக்கா 145%க்கு மேல் வரி போட்டபோது, சீனாவும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியினை 125% என உயர்த்தியது.

அமெரிக்காவிலிருந்து சீனா இறக்குமதி செய்யும் பொருள்களின் மதிப்பு 2024இல் 436 பில்லியன் டாலர்கள் ஆகும். இது சீனாவின் ஏற்றுமதியில் 16.22%. ஆனால், அமெரிக்காவிலிருந்து சீனா இறக்குமதி செய்வது 179 பில்லியன் டாலர் மட்டுமேயாகும். இது சீனாவின் கூட்டு இறக்குமதியில் 6.6%தான்.

சீனா இறக்குமதி செய்யும் பொருள்களில் சிப்பி போன்ற மிகச் சிலவற்றைத் தவிர்த்து, மற்றைய பொருள்களை வேறு நாடுகளிலிருந்து எளிதில் சீனா பெற முடியும். ஆனால், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களை வேறு நாடுகளிலிருந்து குறைந்த விலையில், உரிய தரத்துடன் பெறுவதற்கான வாய்ப்புகள் அமெரிக்காவுக்கு இல்லை.

குறிப்பாக, சில அரிய மண் வகைத் தனிமங்களைச் சீனாவுக்கு வெளியே எங்கும் பெற முடியாது. அமெரிக்காவின் விண்வெளிப் பயணங்கள், சிப்பிகள், மின்கலன்கள், விமானங்கள் ஆகியவற்றின் உற்பத்தி போன்றவற்றுக்கு இந்த அரிய வகை மண் வகைகள் இல்லாவிட்டால், அமெரிக்காவில் பல நிலைகளில் முடக்கம் ஏற்படும். இதனால்தான், சீனாவுடன் வணிகப் பேச்சுகளுக்கு அமெரிக்கா இறங்கி வந்திருக்கிறது.

இறக்குமதி வரி என்ற பொய்மைக் கருவியினை டிரம்ப் கையில் எடுத்திருந்தாலும், இவை உலக நாடுகள் அனைத்துக்கும் பொருந்துவனவல்ல. குறிப்பாக, சீனா, ரசியா ஆகிய இரு நாடுகளை நடுவப்படுத்தி இருப்பவையாகும்.

ரசியாவிலிருந்து எண்ணெய், எரிபொருள் இறக்குமதி செய்தால் அந்த நாடுகளுக்கு 500% இறக்குமதி வரி என அச்சுறுத்தும் சட்டம் ஒன்றினைக் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறது. சீனாவிலிருந்து உற்பத்திக்கான முதன்மைப் பொருள்களை வாங்கி, அவற்றின் வழியே உற்பத்தியை மேற்கொண்டால், வியத்நாம் பொருள்களுக்குப் பெருமளவில் இறக்குமதி வரி போடப்படும் என மிரட்டுவதும் நடக்கிறது.

இவையெல்லாம் எடுத்துக்காட்டுகள்.

உலக மக்கள் தொகையில் 49.5% அளவுக்கு இருக்கும் பிரிக்சு எனப்படும் கூட்டமைப்பு நாடுகள், உலக உற்பத்தி வளத்தில் 40% பெற்றிருக்கின்றன. உலக வணிகத்திலும் இவற்றின் பங்களிப்பு 25% ஆகும். இந்த நாடுகளுக்குக் கூடுதலாக 10% இறக்குமதி வரியென அச்சுறுத்தியிருக்கிறார் டிரம்ப். தென்கொரியா, சப்பான் போன்ற நட்பு நாடுகளுக்கும் கூடுதலாக 25% இறக்குமதி வரி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவும் இப்படித்தான் இடைநிலையில் தவிக்கிறது.

குறிப்பிட்ட நாளில் இறக்குமதி வரிகள் நடைமுறைப்படும் என முதலில் அறிவித்தாலும், அவ்வப்போது இந்தக் கெடு ஒத்திவைக்கப்படுவதும் தொடர்ந்து நடக்கிறது.

## அமெரிக்க டாலரின் மதிப்பிழப்பு

தற்போது மதிப்பு இழந்து வரும் அமெரிக்க டாலரை உலக வணிகத்துப் பயன்படுத்தாவிட்டால், பொருளியத் தடை திணிக்கப்படும் என்பது மற்றொரு மிரட்டலாகும். இதனை ஒதுக்கித் தள்ளிவிட்டு பல நாடுகள் டாலரைக் கைவிட்டு வருகின்றன.

வளர்ந்த நாடுகள், தங்களது மேன்மையினை நிலைநாட்டவும் தங்களது பொருள்களை விற்கவும், எல்லைகள் இல்லாத உலகவயவாக்கம், உலக வணிக அமைப்பு ஆகியவற்றைப் புகுத்தி ஏற்றுமதி இறக்குமதி வரிகளுக்குக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தன. இன்று அவையெல்லாம் அந்த வளர்ந்த நாடுகளுக்கு எதிராக மாறி விட்டன.

பொருள் உற்பத்திப் பெருக்கம், வளர்ந்த மேலை நாடுகளிடமிருந்து வளரும் நாடுகளிடம் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலைமைகளில், டிரம்ப்பின் மிரட்டல்கள், அமெரிக்க வீழ்ச்சியின் வெளிப்பாடுகளாகவே தெரிகின்றன. அடுத்து என்ன செய்வது எனப் புரியாத டிரம்பின் வலிமையற்ற இயலா நிலையையே காட்டுகின்றன.

தொடர்புக்கு : 9444075561



ப.பரமசிவம்

# ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் கட்சி செல்கள் உருவான விதமும், இடங்களும்

**1936 ஆம் ஆண்டில் தோழர் பி.சீனிவாசராவ் அவர்களின் முயற்சியால் சேலம் நகரில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் முதலாவது தமிழ் மாநில அமைப்பு மாநாடு திரு சடகோப முதலியார் தலைமையில் நடைபெற்றது. அதில் தினகர் மேத்தா, ஜீவா, கோவை இராமதாஸ், தீந்திரதாஸ், திருச்சி நீலாவதி அம்மையார் ஆகியோர் பங்கு கொண்டனர்.**

தனி நபர் சத்தியாகிரகத்தைப் பொதுஜனப் போராட்டமாக மாற்ற வேண்டும் என்று அதில் வற்புறுத்தப்பட்டது. மாநாட்டின் இறுதியில் பி.சீனிவாசராவைத் தலைவராகவும் ஜீவாவைப் பொதுச் செயலாளராகவும் கொண்ட ஒரு மாநிலத் தலைமைக் குழு அமைக்கப்பட்டது.

1937 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆத்தூர் வட்டம் செந்தாரப்பட்டியில் தற்போது கெங்கவள்ளி வட்டத்தில் சேலம் மாவட்ட காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் முதலாவது மாநாடு நடத்தப்பட்டது. அதில் தோழர் ஜீவா, சோமயாஜீலு, கோபாலரெட்டி, விசாலாட்சி ஆகியோர் பங்குக் கொண்டனர். தோழர் பாஷாகான் முக்கிய ஏற்பாடுகளைச் செய்து மாநாட்டை நடத்தினார்.

அந்த மாநாட்டில் நீர்ப்பிடிப்பு நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு நிலம் வழங்கும்படியும் வன இலாகா நிலங்களில் மாடு மேய்க்க உரிமை வழங்கும்படியும் தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

இந்த மாநாடுகள் சேலம் மாவட்டத்தில் காங்கிரசுக்குள் ஒரு இடதுசாரிப் பிரிவைத் தோற்றுவிக்க உதவிற்று. இந்தப் பிரிவு 1937 தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்கடிக்கப் பயன்பட்டது.

1937 ஆம் ஆண்டில் மலபாரிலிருந்து தோழர் கே.பி.ஆர்.கோபாலன் தலைமையில் ஒரு பட்டினிப் பட்டாளம் சென்னையை நோக்கிச் சென்றது. அதை சேலம் நகரில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று உணவும், நிதியும் வழங்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் அதாவது 1934 முதல் 42 வரை 8 ஆண்டுக்காலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது முழுமையான தடை விதித்திருந்தது. கட்சியின் அமைப்புகளுக்குத் தடை, பத்திரிகைப் பிரசுரங்களுக்குத் தடை, கூட்டங்களுக்குத் தடை இவ்வாறு கட்சியின் பகிரங்க நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்பட்டன. ஆயினும் கட்சி அமைப்புகள் ஆங்காங்கே மறைமுகமாக உருவாக்கப்பட்டன.




1939 ஆம் ஆண்டில் சேலம் நகரில் கட்சியின் முதலாவது செல் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் கட்சியின் அடிப்படை அமைப்புகள் செல் (Cell) என்று அழைக்கப்பட்டது. தோழர்கள் கே.செல்வராஜ், ஆர்.பி.கோவிந்தராஜ், சாது சீனிவாசமூர்த்தி ஆகிய மூவரும் வெங்கடேசன், பழனி வேலாயுதம் சுப்ரு என்கிற சுப்பரமண்யம், இராமதாஸ், கந்தசாமி, அப்பாய் பக்ருதீன், மாணிக்கம், மாரப்பகவுண்டர் ஆகியோர் அந்த செல்லில் உறுப்பினர் ஆனார்கள். அந்த செல்லின் செயலாளர் தோழர் கே.செல்வராஜ், தோழர் வெங்கடேசன் ஆசிரியராக இருந்து கொண்டே செயல்பட்டார். ஜமத்கனி எழுதிய பொதுவுடைமை என்றால் என்ன என்கிற நூலை விற்பனை செய்தார்.

தோழர்கள் கே.செல்வராஜ், சி.வெங்கடேசன் ஆகிய இருவரும் திண்டுக்கல் சென்று அங்கே மதுரை மாவட்ட காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் தீவிரமாகப் பணியாற்றிய கே.செல்லையாவை சேலத்திற்கு அழைத்து வந்தனர். அவர் சேலம் வந்ததும் கட்சி மையம் (CentralCell) உருவாக்கப்பட்டது. அந்த மையம் தோழர் கோவிந்தராஜின் இல்லத்தில் மறைமுகமாகச் செயல்பட்டது. டெய்லர் பாலு கொரியராகப் பணியாற்றினார். கே.செல்வராஜ் செல்லையா சாது சீனிவாசமூர்த்தி ஆகிய மூவரும் மையத்திலிருந்து செயல்பட்டனர். மாவட்டம் முழுவதும் கட்சிக் கிளைகளை உருவாக்க முயற்சி எடுத்தனர். அப்போது ஒன்றுபட்ட சேலம் மாவட்டமாக இருந்த சேலம் நாமக்கல் தர்மபுரி கிருஷ்ணகிரி மாவட்டங்களை அடங்கியது.

சேலம் மாவட்டத்தின் இரண்டாவது செல் 1939 இறுதியில் நாமக்கல் தாலுகாவைச் சேர்ந்த பழையபாளையத்தில் அமைக்கப்பட்டது. அதில் தோழர்கள் சுப்பு, ராஜன், எஸ்.டி.இராமசாமி, இராமு ஆகியோர் உறுப்பினராகினர். மூன்றாவது செல் காவேரிபட்டினத்தில் அமைக்கப்பட்டது. அதில் தோழர்கள் சாது, சச்சிதானந்தம், டாக்டர் தெய்வம், இராமசாமிபிள்ளை ஆகியோர் உறுப்பினராகினர்.

ஆத்தூர் தோழர் பாஷாகான் தேசிய இயக்கத்தால் கவரப்பட்டு கிராமங்கள் தோறும் காங்கிரஸ் மேடைகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து வந்தார்.

1939 ஆம் ஆண்டில் விருதாச்சலத்திலிருந்து ரயில்வே தோழர்கள் அவருடன் தொடர்பு கொண்டனர். சென்னையிலிருந்து மறைமுகமாக வந்த கையெழுத்துப் பத்திரிகைகளைக் கொடுத்தனர். அதைப் படித்துவிட்டு தோழர் பாஷாகானும், துரை ராஜூம் மேடைகளில் நமது கருத்துகளைப் பேசினர்.

இவ்வாறு கட்சியுடன் தொடர்பு கொண்ட தோழர் பாஷாகான் 1937ல் பெத்தநாயக்கன்பாளையம் சென்று அங்கே ஒரு செல்லைத் துவக்கினார். அந்த செல்லில் தோழர்கள் டி.ராமச்சந்திரன், தங்கவேலு, பெரியசாமி, துரைசாமி ஆகியோர் உறுப்பினர் ஆனார்கள். அப்போது கட்சி தடை செய்யப்பட்டிருந்ததால் கட்சித் தோழர்களும் ஆதரவாளர்களும் ஜனநாயக வாலிபர் சங்கம் அமைத்து அதன் மூலம் பகிரங்கமாகச் செயல்பட்டனர்.

1940 ஆம் ஆண்டில் தோழர்கள் சி.வெங்கடேசன் இராசிபுரம் முத்து ஆகியோர் முயற்சியால் மேட்டூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஒரு செல் அமைக்கப்பட்டது. அப்பள்ளியில் பயின்ற அரூர் முனுசாமி, அப்பாதுரை ஆகிய இருவரும் உறுப்பினராகினர். அவர்களுக்கு மில் தொழிலாளியான தோழர் வெங்கிடுசாமி ஆதரவளித்தார்.

திருச்செங்கோடு புள்ளிகார் மில் தொழிலாளர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக 1940 ஆம் ஆண்டில் 9 நாள் வேலை நிறுத்தம் தன்னெழுச்சியாக தலைமையே இல்லாமல் தொழிலாளர்களே ஒன்று திரண்டு வேலை நிறுத்தம் செய்தார்கள். இச்செய்தி அறிந்த தோழர் என்.கே. கிருஷ்ணன் கோவையிலிருந்து திருச்செங்கோட்டுக்கு நேரடியாக வந்து அவர்களுக்கு வழிகாட்டினார். அவர்தான் முதலில் கட்சியைப் பற்றிய செய்தியைக் கொண்டு வந்து தொழிலாளர்களிடம் சேர்த்தார். தோழர்கள் டி.எஸ்.அர்த்தனாரி, டி.ஆர்சண்முகம், சிரியப்பா ஆகியோர் கட்சியின் செல் ஒன்றை திருச்செங்கோட்டில் அமைத்து சேலம் கட்சி மையத்துடன் தொடர்பு கொள்ள வைத்தார்.

இவ்வாறு சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, மேட்டூர், ஆத்தூர் காவேரிபட்டனம் ஆகிய இடங்களில் கட்சி அமைப்புகளும் தொடர்புகளும் ஏற்பட்டன.

சேலம் மாவட்டத்தில் முதன்முதலில் சேலம் நகரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு நடைபெற்றுள்ளது. அதேபோல் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோட்டில் தமிழ்மாநில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றுள்ளது. எதிலும் முதன்மையாக இருந்ததுதான் சேலம் மாவட்டம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநாடு சேலம் மாநகரில் நேரு கலை அரங்கில் ஆக 15, 16, 17 மற்றும் 18 தேதிகளில் நடைபெறுகிறது. கடைசி நாள் ஆக 18ல் 10 ஆயிரம் பேர்கள் கொண்ட செந்தொண்டர்படை முன்செல்ல கட்சி அணிகள் பல லட்சக்கணக்கானோர் பின் செல்ல இறுதியில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது. மாநாடு சிறக்க அணி அணியாகத் திரண்டுவர மாநாட்டு வரவேற்புக் குழு சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9442995040**

# ரயில் மோதியதில் பள்ளிக் குழந்தைகள் உயிரிழப்பு - படுகாயம்

## ஒன்றிய அரசு பொறுப்பேற்க வேண்டும் என சிபிஐ வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடலூர் மாவட்டம் செம்மங்குப்பம் அருகே ரயில்வே கேட்டைக் கடக்க முயன்ற பள்ளி வேன் மீது ரயில் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்ததாகவும், மற்ற குழந்தைகள் உயிராபத்தான நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சியளிக்கும் தகவல் நெஞ்சைப் பிளக்கும் வேதனை அளிக்கிறது.

இந்த ரயில்வே கிராசிங் வாயிலை, ரயில் வரும் முன்பாக, குறிப்பிட்ட காலத்தில் மூடவேண்டிய வாயில் காப்பாளர் (gate keeper), கடமையை மறந்து தூங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. வாயில் காப்பாளரின் அலட்சியத்தால், மூன்று குழந்தைகளின் உயிர்கள் பலியாகியுள்ளன.



இந்தத் தவறுக்கு ஒன்றிய அரசும், ரயில்வே அமைச்சகமும் முழுப்பொறுப்பேற்க வேண்டும். ஒன்றிய அரசு உயிரிழந்த குழந்தைகள் குடும்பங்களுக்குத் தலா ரூ.5 கோடி வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். படுகாயமடைந்த குழந்தைகளுக்குத் தேவையான உயர் சிகிச்சைச் செலவுகளை ஒன்றிய அரசு ஏற்பதுடன், அவர்களது குடும்பங்களுக்கும் ரூ.25 லட்சம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

மேலும் உயிரிழந்த குழந்தைகளுக்கு இரங்கலும் அவர்களது குடும்பங்களுக்கு ஆறுதலும் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பாஜகவின் வலைக்குள் சிக்கிய அதிமுக

## எடப்பாடி பழனிசாமியின் பல்டிகள்

**அதிமுக – பாஜக கூட்டணி அறிவிப்பு வெளியிடப்பட்டதில் இருந்தே அடுத்தடுத்து சர்ச்சைகள். குறிப்பாக, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கூட்டணி குறித்துப் பேசுவதற்காக டெல்லிக்குச் சென்றது, கூட்டணி ஆட்சி, முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்பது உட்பட பல்வேறு கேள்விகள் எழுந்தன.**



அவற்றுக்குப் பதிலளிக்கமறுத்தும் நிராகரித்தும் வந்த எடப்பாடி பழனிசாமி, ஜூலை 7ஆம் தேதி சுற்றுப்பயணத்தைத் தொடங்கினார். பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், வானதி சீனிவாசன் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

ஏப்ரல் முதல் வாரத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான அமித்ஷாவும், அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது, அதிமுக பாஜக கூட்டணியை அமித்ஷா உறுதி செய்தார். அவரிடம் தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி அமையுமா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த அமித்ஷா, “ஆம், நாங்கள் ஒன்றாக இணைந்து ஆட்சியமைப்போம்“ என்றார். அதனை மொழிபெயர்த்தவரும், “நாங்கள் இணைந்துதான் ஆட்சியமைக்கப் போகிறோம். கூட்டணி ஆட்சிதான் நடைபெறப் போகிறது” என்றுதான் மொழிபெயர்த்தார்.



ஆனால், அதிமுக பாஜக கூட்டணி உருவானதைவிட, கூட்டணி ஆட்சி என்று அமித்ஷா பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது. பாஜகவிடம் அதிமுக சரண் அடைந்துவிட்டதாக அரசியல் கட்சிகள் சாடின. ஆனால், எடப்பாடி பழனிசாமி இது பற்றி எதுவும் பேசாமல், தெளிவுபடுத்தாமல் அமைதியாக இருந்து வந்தார்.

ஒரு வாரம் கழித்து, “கூட்டணி ஆட்சி என்று அமித்ஷா சொல்லவேயில்லை. நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டு ஏதேதோ வித்தையெல்லாம் காட்டுகிறீர்கள். தயவுசெய்து இந்த வித்தையை எல்லாம் விட்டுவிடுங்கள். ‘அதிமுக – பாஜக கூட்டணி’ தான் ஆட்சியைப் பிடிக்கும். உங்களுக்கு ஏதாவது விறுவிறுப்பான செய்தி வேண்டும் என்பதற்காக என்னிடமிருந்து பிடுங்கப் பார்க்கிறீர்கள்” என்று செய்தியாளர்கள் மீது எடப்பாடி பழனிசாமி பாய்ந்தார்.

கூட்டணி ஆட்சி குறித்து அமித்ஷா கூறியிருக்கிறாரே என்று செய்தியாளர்கள் அவரிடம் மீண்டும் கேள்வி எழுப்பினர். அதற்கு, “கூட்டணி ஆட்சி என்று நாங்கள் சொல்லவில்லை, அதிமுக பாஜக கூட்டணி தான் ஆட்சி அமைக்கும் என்று சொல்கிறோம். அமித்ஷாவும் இதையேதான் கூறினார். மத்திய அரசுக்கு மோடி போல, தமிழ்நாட்டுக்கு எனது (எடப்பாடி பழனிசாமி) பெயரையே அவர் கூறினார். எனவே இதை வேறு மாதிரியாகப் பார்க்க வேண்டாம்“ என்று எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

தொடக்கத்தில், “பாஜகவுடன் கூட்டணியா? அப்படி எதுவும் கிடையாது” என மறுத்து வந்த எடப்பாடி பழனிசாமி, பின்னர் பாஜகவுடன் கூட்டணி என்பதை ஒப்புக்கொண்டார். அடுத்து “கூட்டணி ஆட்சி என்று அமித்ஷா சொல்லவில்லை. நீங்களாக கண்டுபிடிக்கிறீர்கள்” என்று மறுத்து வந்தார். அதனையும் பின்னர் ஒப்புக்கொண்டதால், அதுவும் பொய் என்பது அம்பலமானது.

இதனையடுத்து ஜூலை 5ஆம் தேதி, அதிமுக தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, ‘‘அமித்ஷா சென்னை வந்த போது தெளிவாகப் பேசியுள்ளார். அதிமுக – பாஜக கூட்டணி உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அதிமுக தலைமையில்தான் கூட்டணி அமைக்கப்படும். நான்தான் (எடப்பாடி) முதலமைச்சர் வேட்பாளர்” என்றார். அப்போது செய்தியாளர்கள், “அதிமுகவில் இருந்து ஒருவர் முதலமைச்சர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்படுவார் என்று அமித்ஷா கூறியிருக்கிறாரே” என்று கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த எடப்பாடி பழனிச்சாமி, ‘‘இதில் டெல்லி எடுப்பதுதான் முடிவு. உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். மத்திய உள்துறை அமைச்சர் கூறிய பிறகு, அதற்கு அடுத்தாற்போல் யார் பேசினாலும், அது சரியில்ல என்பதான் என்னுடைய கருத்து. இப்போது அதைப் பற்றியே கேள்வி கேட்டு, அதற்கு ஒரு வடிவம் கொடுப்பது சரியா?” என்றார். எடப்பாடி பழனிசாமியின் இந்த விளக்கத்தைக் கேட்டவுடன், செய்தியாளர்கள் மட்டுமல்ல அதிமுக தலைவர்களும், நிர்வாகிகளும் அதிர்ச்சி அடைந்திருப்பர்.

“பாஜகவுடன் கூட்டணி” இல்லவே இல்லை.

“அதிமுக, பாஜக கூட்டணி ஆட்சி” இல்லவே இல்லை.

“அதிமுகவின் முதலமைச்சர் வேட்பாளரை பாஜக தேர்வு செய்யும்” அப்படி நடக்காது.

இப்படி எல்லாம் பேசி வந்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பின்னர் பல்டி அடித்து அனைத்தையும் ஆமோதித்திருக்கிறார்.

“பாஜகவுடன் கூட்டணி”

“அதிமுக, பாஜக கூட்டணி ஆட்சி”

“அதிமுகவில் இருந்து ஒருவர் முதலமைச்சர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்படுவார்”

இவற்றை எல்லாம் எடப்பாடி பழனிசாமி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அதிமுகவின் முதலமைச்சர் வேட்பாளரைக்கூட அமித்ஷாதான் முடிவு செய்வார் என்று எடப்பாடி பழனிசாமியே கூறியிருப்பது அதிமுகவினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. பாஜகவின் வலையில் சிக்கிவிட்டது, பாஜகவின் அடிமையாகி விட்டது என்று அதிமுக விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், எடப்பாடி பழனிசாமியின் பேட்டி அதனை உறுதி செய்திருக்கிறது.

“நாங்கள் மக்களுக்கு நல்லது செய்து, நாட்டுக்கு பெருமை சேர்க்கும் பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளோம். பாஜகவுடன் கூட்டணி வைத்ததில் என்ன தவறு?” என்று பரப்புரைப் பயணத்தில் பேசிய எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆர்எஸ்எஸ், பாஜகவின் பாசிச அரசியலுக்குப் பலியான எந்தக் கட்சியும் அதிலிருந்து விடுபட்டு தனித்தன்மையை நிலைநிறுத்திக் கொண்டதில்லை. “மோடியா? லேடியா?” என சவால் விட்ட அதிமுக, பாசிச அரசியலுக்குப் பலியாகியிருப்பது தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டின் நலனுக்கும் ஆபத்தை விளைவிக்க கூடியது.

**வ.மணிமாறன்**
**தொடர்புக்கு: 9500001224**

### மாற்றி மாற்றிப் பேசுகிறார்

பரப்புரை பயணத்தின் போது ஒரு நாள் காலையில் எடப்பாடி பழனிசாமியிடம் விவசாயி ஒருவர், “அத்திக்கடவு ரு அவிநாசி திட்டத்தை நீங்கள் ஏன் நிறைவேற்றவில்லை” என்று கேட்கிறார். அதற்கு எடப்பாடி பழனிசாமி, “அத்திக்கடவு ரு அவிநாசி திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பிவைத்தோம். அவர்கள் நிராகரித்து விட்டார்கள்” என்று கூறுகிறார்.

மாலையில் பேசிய எடப்பாடி பழனிசாமி, “மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு எதுவும் கொடுக்கவில்லை. எதுவும் செய்யவில்லை என்று ஸ்டாலின் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே இருக்கிறார்” என்று அங்கலாய்க்கிறார்.

மோடி அரசுக்கு முட்டுக்கொடுக்க வேண்டும் என்று முழுச் சங்கியாக மாறிக் கொண்டிருக்கும் எடப்பாடி பழனிசாமி முடிவெடுத்துவிட்டார். அதனால் இப்படி மாற்றி மாற்றிப் பேசித்தான ஆக வேண்டும். பல்டி அடித்துத்தான் ஆக வேண்டும்.

### செங்கோட்டையன் மோதல் காணாமல் போனது எப்படி?



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அதிமுக மூத்த தலைவர் செங்கோட்டையன் போர்க்கொடி தூக்கினார். கோவையில் எடப்பாடி பழனிசாமிக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை. எம்ஜிஆர், ஜெயலலிதா படங்கள் இல்லாததால் பங்கேற்கவில்லை என்று அவர் கூறினார். கோபிசெட்டிப்பாளையத்தில் நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில் பேசிய செங்கோட்டையன், எடப்பாடி பழனிசாமியின் பெயரைத் தவிர அனைவரின் பெயர்களையும் கூறினார்.

சென்னையில் விழா ஒன்றில் பேசிய செங்கோட்டையன், “பிரதமர் நரேந்திர மோடி தேசிய ஒருமைப்பாட்டை காத்துள்ளார். அதிமுகவை நிறுவிய எம்ஜிஆர் தேசிய ஒருமைப்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்தார். அதனை தொடர்ந்து ஜெயலலிதாவும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்” என்று பேசினார்.

அவரை டெல்லிக்கு அழைத்து அமித்ஷா பேசினார். ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனும் பேச்சு நடத்தினார். எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்று கூட்டணியை இறுதி செய்தவுடன், செங்கோட்டையன் போர்க்கொடி தூக்கியது என்ன ஆனது என்று தெரியவில்லை.

கட்சிக் கடிதம்

# காலம்தோறும் கம்யூ



மாநில மாநாட்டை நோக்கி... 4

போர்க்குணமிக்க தோழர்களே!

**சேலம் மாநகரில் ஆகஸ்ட் திங்கள் 15 முதல் 18 முடிய 4 நாட்கள் நடைபெறவுள்ள மாநில 26 வது மாநாடும், மாநாட்டின் நிறைவு நாளாம் ஆகஸ்ட் 18ஆம் நாள் நடைபெறவுள்ள பிரம்மாண்டத்தையும், மிஞ்சிடும் மகத்தான பேரணியும், லட்சக்கணக்கான மக்கள் பங்கு பெறும் பொதுக் கூட்டத்தையும், வெற்றிகரமாக நடத்தி, புதிய வரலாறு படைத்திட தமிழ்நாடு முழுவதும் உள்ள கட்சிக் கிளைகளும், இடைநிலைக் குழுக்களும், மாவட்டக் குழுக்களும் அனைத்து ஆயத்தப் பணிகளையும் மேற்கொண்டுள்ளன.**

இந்நிலையில், அதற்கு முன்னதாக ஜூலை 28ஆம் நாள், தலைநகர் சென்னையில் பிரம்மாண்டமான மற்றொரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி நடைபெற உள்ளது. சேலம் மாநாட்டின் நடுவிலேயே இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

கம்யூனிஸ்டுகளின் அளப்பரிய தியாக வரலாற்றை எடுத்துக் கூறும் மகத்தான விழா! 1917 ஆம் ஆண்டு உலகமே வரவேற்று மகிழ்ந்த மாபெரும் புரட்சியை உலகம் கண்டது.

இரஷ்யாவில் ஏற்பட்ட அம்மகத்தான அக்டோபர் புரட்சியானது, உலகம் முழுமையும் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின், கண்களைத் திறந்தது. புதியதோர் நம்பிக்கையை விதைத்தது! தன்னம்பிக்கையைத் தந்தது. அடக்குமுறைக் கொடுமைகளுக்கு எதிராகப் போராட முடியும், வெற்றியைப் பெற முடியும், அடிமைச் சங்கிலியை அறுத்தெறிய முடியும் என்ற பெரும் நம்பிக்கையைத் தந்தது.

ஆம்! நமது உலக மகாகவி, எட்டயபுரத்து கவிஞன் ஓங்கி ஒலித்தான்.

“மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள், அங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்...”

என்று தொடங்கிய கவி

“குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு,
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார் குடியரசென்று
உலகறிய கூறி விட்டார்.
அடிமைக்குத் தளையில்லை,
யாருமிப்போது
அடிமையில்லை. அறிக
என்றார்.
இடிபட்ட சுவர்போல கலிவிழுந்தான்.
கிருத யுகம் எழுக மாதோ”

என நீண்ட கவிதையை நிறைவு செய்தார்.

மற்றுமோர் கவிதையில்,

“இனியொரு விதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம்,
தனியொருவருக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!”

என முழங்கினான்.

அதே கவிதையின் பிற்பகுதியில்,

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை.
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை வாழ்க!

என்று கம்பீரம் தொனிக்க, தீர்மானகரமாக முழக்கம் செய்தான்.

அவரது முழக்க மொழிகள் வீண் போகவில்லை. விழலுக்கு இறைத்திட்ட நீராகவில்லை. ருசிய புரட்சிக்குப் பின்னர் தான் விழித்துக் கொண்ட உலகம், தங்களின் தாய் நாட்டுக்கான விடுதலை போரினை தீவிர படுத்தின. அத்தகைய நாடுகளில் நமது தாய்நாடும் ஒன்று.

பல்வேறு குழுக்களாய்ப் பரவிக் கிடந்த இந்திய கம்யூனிஸ்டுகள் ஒன்று கூட முடிவெடுத்தனர்.

அத்தகைய முடிவு தான் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் முதல் கான்பூர் நகரில், சிந்தனை சிற்பி சிங்காரவேலர் தலைமையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் அமைப்பு மாநாடாகும்.

அம்மாநாட்டின் இரண்டாம் நாளான டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள், நமது கட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயர் சூட்டப்பட்டது.

இம்மாநாட்டில் தான் நாட்டிற்கு தேவை பரிபூரண சுதந்திரம் என்ற மகத்தான தீர்மானம்.

பரிபூரணம் என்றால் வெறும் வெள்ளையர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவது மட்டுமின்றி, நாடு பொதுவுடைமச் சமுதாயத்தை காண வேண்டும் என்கிற உயிர்த்துடிப்புள்ள தீர்மானம் ஆகும்.

கம்யூனிஸ்ட் கட்சி மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றி, அதை ஊடகங்களுக்கு அளித்துவிட்டு அத்துடன் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்று விடுவது அல்ல.

மாறாக ஒவ்வொரு தீர்மானத்தையும் நடைமுறைப்படுத்திட, அவை முழுமையாக நிறைவேற்றப்படும் வரை, இடையறாது இயக்கம் கண்டு, வெற்றியைக் குறிக்கோளாக கொண்டதாகும்.

அத்தகைய பணிகளைத்தான் நம் தோழர்கள் மேற்கொண்டார்கள்.

ஆனால் இதனை ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, ஆதிக்க சக்திகளும் அரசோடு இணைந்து கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக போர் கொடி தூக்கினார்கள்.

கம்யூனிஸ்டுகள் மீது அவதூறுகளை அள்ளி வீசினார்கள்.

அவர்களின் அவதூறுகளை முதலாளித்து ஏடுகள் பக்கம் பக்கமாக கொட்டை எழுத்துகளில் எழுதித் தள்ளினார்கள்.

ஒருமுறை அல்ல, மூன்று முறை இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்து ஒடுக்க முயன்றார்கள்.

அத்தகைய தடைகளை தகர்த்து எறிந்து, போர்முரசு கொட்டி, எதிர் கொண்ட இயக்கம் தான் கம்யூனிஸ்ட் பேரியக்கம் என்பதனை வரலாறு அறிந்தோர் அனைவரும் உணர்வார்கள்.

பகிரங்கமாக செயல்பட முடியாத பெரும் நெருக்கடி, தோழர்கள் ஒருவருக்கொருவர் நேரில் சந்தித்து உரையாட முடியாத நெருக்கடி.

கட்சிக் கடிதங்களை தோழர்களுக்கு அனுப்ப இயலாது. கடிதங்கள் அனைத்தும் அரசால் பறிமுதல் செய்யப்படுவது மட்டுமல்ல, கடிதம் எழுதியவர் யார்? எங்கிருந்து அஞ்சல் செய்யப்பட்டது? யாருக்கு எழுதிய கடிதம் என்று மோப்பம் பிடித்து, அவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

கட்சி பத்திரிகை நடத்த இயலாது என்பன போன்ற கொடிய அடக்குமுறைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

அகப்பட்ட தோழர்களை எல்லாம் கைது செய்வதும், அவர்களை போலீஸ் காவலில் வைத்து சித்திரவதை செய்வதும், மற்றவர்கள் எங்கே இருக்கிறார்கள் சொல் என்று தடிகொண்டு தாக்குவதும், சிகரெட் நெருப்பால் சுடுவது, முகத்தில் உள்ள ரோமங்களை ஒவ்வொன்றாகப் பிடித்து இழுத்து, சித்ரவதை செய்வது என்பது மட்டுமா நடந்தது?

தலைகீழாக தொங்க விட்டு அடிப்பது, சிறை கொட்டடியில் அடைத்து, ஜன்னல் கம்பிகளை கெட்டியாக பிடிக்கச் சொல்லி விட்டு பின்பக்கம் அடிப்பது, ஆசனவாயில் மிளகாய் பொடியை திணித்து கொடுமைப்படுத்துவது, மிளகாய் பொடியைத் தண்ணீரில் கரைத்து உடல் முழுவதும் ஊற்றி எரிய செய்வது என அடக்குமுறை அடையாளங்கள் மட்டுமல்ல, துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதும் உண்டு. அப்படிக் கொல்லப்பட்டவர்கள் எத்தனை எத்தனை பேர். தூக்கு கயிற்றில் தொங்கவிட்டு சாகடித்தார்கள். அடித்தே பல நூறு தோழர்களை அணு, அணுவாக சாகடித்தார்கள். மொத்தத்தில் இமயம் முதல் குமரி வரை கம்யூனிஸ்டுகள் நர வேட்டையாடப்பட்டார்கள்.




அவர்களது அளப்பரிய தியாகம் சொல்லி மாளாது, எழுதியும் மாளாது.

கட்சி உறுப்பினர் மட்டுமல்ல தோழர்களே! கம்யூனிஸ்ட் குடும்பப் பெண்கள் பட்ட பெருந் துயரம் எல்லோர் தியாகத்தை காட்டிலும் மேலானது.

எத்தனை ஆயிரக்கணக்கான தோழர்கள் தங்களின் கல்வியை இழந்தார்கள்.

பார்த்த வேலையை பறிகொடுத்தார்கள், தாங்கள் மனப்பூர்வமாக நேசித்த காதலை துறந்தார்கள்.

தாங்கள் பெற்ற பிள்ளைகளின் முகம் காணாத தலைவர்களும் உண்டு.

தாயைக் காணாது, தந்தையை அறியாது அனாதைகள் ஆக்கப்பட்டவர்கள் உண்டு. இத்தனை கொடுமைகளையும், சித்திரவதைகளையும் தாங்கி நின்ற நம் தியாகிகளை முழுமையாக அறிந்தது உண்டா? நம் தலைவர்களை நாம் அறிந்தது உண்டா?

சில தியாகிகளை நமக்கு தெரிகின்றது. சில தலைவர்களைத் தெரிகின்றது. முழுமையாக தெரியவில்லை. நமக்கு தெரியவில்லை என்பது மட்டுமல்ல,

# னிஸ்டுகள்




தோழர்களே ! நம் நாட்டு மக்களுக்கு தெரிய வேண்டாமா?

நாம் யார் என்பது இவ்வுலகிற்கு தெரிய வேண்டாமா? ஒரு நாள் சிறையில் இருந்தால் கூட அவர்களுக்கு ஆயிரம் பக்கங்களில் புத்தகங்கள் வெளிவருகின்றன. அவர்களை குறித்து பாட்டுகள் பாடப்படுகின்றன. கவிதை நூல்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆனால் நம் தலைவர்கள் ஒரு நாள் அல்ல, ஒரு மாதம், ஓராண்டு அல்ல, ஆயுள் தண்டனை பெற்றவர்கள் ஏராளம், ஏராளம்.

தங்கள் பெயருக்கு பின்னால், தாங்கள் படித்து பல்கலைக் கழகம் வழங்கிய பட்டங்களை பிஏ, எம்ஏ, எம்.காம், பிஎஸ்சி என போட்டுக் கொள்வோர் உண்டு.

நாடு விட்டு நாடு சென்று, லண்டன் மாநகரில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்று, உயரிய பட்டங்கள் பெற்ற ஏராளமான தோழர்கள் தங்களை படிப்பு குறித்து கூறியது இல்லை.

ஏன்? நாம் சாமானிய மக்களுக்கு, எழுதப் படிக்கத் தெரியாத உழைப்பாளி மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற நாம் செல்கின்ற போது, நமது படிப்பை கண்டு அவர்கள் நம்மை விட்டு விலகி சென்று விடலாகாது. மக்களோடு மக்களாய் நாம் இரண்டறக் கலந்து நம் கடமையை ஆற்றிட வேண்டும் என்ற நல்லெண்ணம் அல்லவா?

அவர்களை நாம் அறிய வேண்டாமா? அவர்கள் தியாகத்தை நாம் மதிக்க வேண்டாமா? போற்றிப் புகழ வேண்டாமா?

தங்கத் தொட்டிலில் உல்லாசமாய் ஊஞ்சலாடிய குழந்தை, லண்டன் சென்று படித்து, பட்டம் பெற்ற போதும், பணக்காரன் வீட்டுப் பிள்ளை என்ற மமதை மறந்து, சாதாரண மக்களுக்கு, நகர சுத்தி தொழிலாளிக்கு சேவையாற்றிய மாமனிதர்களை அறிந்து கொள்ள வேண்டாமா?

ஜமீன்தார் வீட்டில் பிறந்து, லண்டன் சென்று படித்து பட்டம் பெற்ற போதும், சாதி மறுப்பு திருமணம் செய்து, கணவனோடு சேர்ந்து கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர்களை அறிய வேண்டாமா?

வீட்டுக்கு கடிதம் எழுதினால் வேண்டிய மட்டும் பணம் கிடைக்கும் என்ற வாய்ப்பு இருந்த போதும், அதனை தவிர்த்து கட்சி கொடுக்கும் குறைந்த ஊதியத்தில் வாழ்ந்து, ஒவ்வொருவரும் தனித்தனியாக இரண்டு டீ வாங்கி அருந்தினால் பொருளாதார நெருக்கடி வரும் என்பதனை தவிர்க்க, நாயர் கடையில் ஒரு டீ வாங்கி இருவரும் பகிர்ந்து அருந்திய ஜமீன்தார் வீட்டு கம்யூனிஸ்டுகளை அறிந்து கொண்டோமா?

தலை மறைவு வாழ்க்கை மேற்கொண்ட தலைவரை பிடிக்க வலைவீசி தேடியும் பிடிபடவில்லை. தலைக்கு விலை வைத்த போதும் யாரும் காட்டிக் கொடுக்கவில்லை. துப்பு கெட்ட சர்க்கார் போலீஸ்சை அனுப்பி, அவரது மனைவி யிடம் விசாரணை செய்ய உத்தரவிட்டது. பலன் இல்லை. அப்பெண்மணியை, மாசற்ற மாமணியை நீதிமன்றத்தில் நிறுத்தி, உன் கணவர் எங்கே? என வினா தொடுத்தது. தெரியாது என்கிற பதிலை தவிர்த்து, வேறு வார்த்தைகளை பெற முடியாது தோற்றுப் போன நீதிமன்றம். அந்த தாயைப் பார்த்து கேட்டது. தெரியாது, தெரியாது என்றால் நீ எப்படி கர்ப்பமாக இருக்கிறாய் என அதிரடியாக கேட்டது. பதில் என்னவாக இருக்கும் என நீங்களே கற்பனை செய்து பாருங்கள் தோழர்களே !

அந்தத் தாய் தயக்கம் இன்றி பகிரங்கமாக கூறினார், என் கொழுந்தனாருக்கு கர்ப்பிணியாக இருக்கிறேன் என்றார்.

துப்புக் கெட்ட சர்க்கார் வெட்கி தலை குனிந்தது. கம்யூனிஸ்டுகள், அவரது குடும்பப் பெண்கள் எவ்வாறு உறுதி மிக்கவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இதை விட வேறு உதாரணங்கள் வேண்டுமோ? இவை போன்ற சம்பவங்கள் ஏராளம், ஏராளம் !

இத்தகைய தியாகங்கள் என்னிலடங்கா, அவைகள் அனைத்தையும் நம் தோழர்கள் அனைவருக்கும், மக்களுக்கும் சென்றடைய வேண்டாமா?

நமது தியாகங்கள் அனைத்தும் மக்களிடத்தில் முழுமையாக சென்றடைந்து இருக்குமேயானால், நம் கட்சியின் வளர்ச்சி எவ்வாறு இருந்திருக்கும் என்பதை சற்று எண்ணிப் பருங்கள் தோழர்களே !

வரலாற்று சிறப்புமிக்க நமது கட்சியின் நூற்றாண்டு விழா நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

நூற்றாண்டை ஒட்டி நமது தியாகத்தை, நமது வரலாற்று நாயகர்களின் வாழ்க்கை சுருக்கத்தை, மக்களிடம் கொண்டு செல்ல, நூற்றாண்டை நாம் ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா?

அம்மகத்தான பணியினை மேற்கொள்ள வேண்டுமென கருதியே, நம் கட்சி நாயகர்களின் வரலாற்றைத் தொகுத்து, பல தொகுதிகளாக வெளியிட வேண்டும் என்று முடிவு செய்தது.

இப்பணிகள் சாதாரணமானவையல்ல, மிக மிகக் கடினமான பணியாகும். இதனை முழு பொறுப்பேற்று செய்து முடிக்கும் ஆற்றல் உள்ள தோழராக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, எழுத்து நடை, எல்லோருக்கும் படிக்கும்படியாக இருத்தல் வேண்டும். எழுத்தாற்றல் மிக்கவராகவும், முழு நேர பணியாக மட்டுமல்லாது, உணர்வுபூர்வமாக இப்பணிகளை விருப்பு, வெறுப்பின்றி மேற்கொள்வதாகவும் இருந்திடல் வேண்டும்.

இப்பணிற்குரிய வரை தேடும் போது, நமக்கு கிடைத்த நல் எழுத்தாளர், நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர், கவிஞர், தோழர் கே. ஜீவபாரதியிடம் இப்பொறுப்பை கட்சி ஒப்படைத்தது.

அவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு பொறுப்பேற்று, முதற்கட்டமாக நூறு தியாகிகள் மற்றும் தலைவர்கள் குறித்து மிகச் சிறப்பான முறையில் தொகுத்துள்ளார். இரண்டு பாகங்களாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் மிக முக்கியமாக, கட்சி வேறுபாடு இன்றி அதாவது சிபிஐ, சிபிஎம் என்கிற வேறுபாடுகள் இன்றி இந்நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளது. மிகச்சிறந்த ஆவணமாகும்.

தியாகிகள், தலைவர்கள் வாழ்க்கை குறிப்பு மட்டுமல்ல, அவர்கள் ஒவ்வொருவரையும் மிக அழகாக, வண்ணமயமாக, திருவண்ணாமலை ஓவியர் தோழர் அன்பு வரைந்துள்ள படங்களும் இடம்பெற்றுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

வரலாற்று சிறப்புக்குறிய இந் நூலுக்கு, காலந்தோறும் கம்யூனிஸ்டுகள் என தலைப்பிடப்பட்டுள்ளது.

இரு பாகங்கள் இந்நூலின் மாபெரும் வெளியீட்டு விழா, வரும் 28.7.2025 ஆம் நாள் மாலை, சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியின் முக்கியத்துவம் கருதி நமது கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா தலைமை ஏற்கிறார். நமது புகழ்மிக்க என்.சி.பி .எச் நிறுவனத்தின் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்.

முதல் பாகத்தை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும், இரண்டாம் பாகத்தை கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் பெற்றுக் கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் ஆற்றல் மிக்க மேலாண்மை இயக்குனர் க.சந்தானம் நன்றி கூற உள்ளார். நூல் தொகுப்பு ஆசிரியர் கே. ஜீவபாரதி ஏற்புரை நிகழ்த்த உள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவில், தோழர்களே ! உங்களுக்குரிய வேலைப் பளுவில் இதனை ஒரு பகுதியாக ஏற்று, நீங்கள் ஒவ்வொரு தோழரும் குடும்பத்துடன் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென அன்போடும் தோழமை உணர்வோடும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்.

மாநில குழு விடுத்துள்ள அழைப்பை நீங்கள் பெருமையாக கருதி பங்கேற்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

தோழர்களே நீங்கள் பங்கெடுப்பது மட்டுமல்ல, சிபிஎம் தோழர்களுக்கும் அழைப்பு கொடுத்து, அவர்களையும் பங்கேற்க செய்வது நமது கடமையாகும்.

தோழர்களே பங்கேற்றால் மட்டும் போதுமா? பங்கேற்பது எவ்வளவு மிக முக்கியமோ? அதை போன்று நீங்கள் ஒவ்வொருவரும், நூலை வாங்கி படித்து, பத்திரமாக பாதுகாக்க வேண்டும் என்பது மிக மிக முக்கியமானது.

இது போன்றதொரு நூல் இதற்கு முன்னர் வந்ததில்லை.

நமது முன்னோர்கள் அளவிற்கு நாம் பெரும் தியாகம் செய்துவிடவில்லை என்பது மிக மிக எதார்த்தமானது.

நாம் தியாகம் செய்யவில்லை என்றாலும் அவர்கள் தியாகத்தை நாம் அறிந்து கொள்ள மிக அவசியமல்லவா?

அவர்களது தியாகம், அவர்களது வாழ்க்கை அத்தகைய முன்னுதாரணங்களை,நம் வாழ்க்கைக்கு பயன்படும் நல்லதொரு பாடம் அல்லவா?

நமக்கு ரோல் மாடல் யார் எனில், நமது வரலாற்று நாயகர்கள் தான். அவர்களின் தியாகத்திற்கு ஈடு, இணை வேறு எவரேனும் உண்டா? எனக் கேட்டால் மனசாட்சி மறுக்கின்றது.

ஒவ்வொரு தோழரின் வரலாற்றை படிக்கும் போது கண்களில் ரத்தக்கண்ணீர் வடிகின்றது.

அப்படிப்பட்ட மகத்தான தியாகிகள் குறித்தும், தலைவர்கள் குறித்தும் தொகுக்கப்பட்ட பெருநூல் காலம் தோறும் கம்யூனிஸ்டுகள்.

இந்நூல் முழுவதும் வழுவழுப்பான ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

வண்ணமயமாய் ஜொலிக்கும் படங்கள் அலங்கரிக்கின்றன.

இரண்டு தொகுதிகளில் அடக்க விலை ரூபாய் 2000 மட்டுமே, தோழர்களுக்கு விலை சற்று குறைத்து கொடுத்தால் நல்லது என்ற, நம் வேண்டுகோளை ஏற்று, நிறுவனம் ரூபாய் 400 தள்ளுபடி செய்து, இரண்டு பாகங்களும் ரூபாய் 1600 க்கு வழங்கிட முன்வந்தமைக்கு நம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இச்சலுகை என்பது நூல் வெளியிட்டு நாளான ஜூலை 28 வரை மட்டுமே.**

போர்க்குணமிக்க தோழர்களே ! நம் கட்சியின் ஒவ்வொரு கிளைச் செயலாளர், இடைக்குழு உறுப்பினர், மாவட்ட, மாநிலக் குழு உறுப்பினர்கள் மட்டுமன்றி,கட்சியை உள்ளன்போடு நேசிக்கும் அத்தனை தோழர்களின் இல்லம் தோறும் அலங்கரிக்க வேண்டிய அற்புத பொக்கிஷமாகும்.

பணம், காசு இன்று வரும், நாளை போகும்.பணம் முக்கியமல்ல, அதனை விட நூல்கள் முக்கியம் என்பதனை கூறவும் வேண்டுமா?

**இன்றே பணத்தை அனுப்பி, நூல்களைப் பெறுவதை உறுதிப்படுத்துங்கள். காலந்தோறும் கம்யூனிஸ்டுகள் எனும் மகத்தான நூலை வாங்கிடுவீர்!.**

நமது வரலாற்று நாயகர்களின் தியாகத்தை தெரிந்து கொள்ளுங்கள், பெருமை கொள்ளுங்கள்.

விழாவில் பங்கேற்க வாருங்கள் ! உங்களின் ஒவ்வொருவரின் வருகையும் விழாவிற்கு பெருமை சேர்க்கட்டும்.

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

**(இரா.முத்தரசன்)**
மாநிலச் செயலாளர்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டதும் - தடை நீக்கப்பட்டதும்

1



எம்.ரவி

இந்தியாவில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை உத்திரப்பிரதேசத்தில் உள்ள கான்பூர் நகரில் நடைபெற்ற மாநாட்டில் துவக்கப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்படுவதற்கு முன்னரும், துவக்கப்பட்டதற்குப் பின்னரும் அதாவது 1922 ஆம் ஆண்டு முதல் 1933 ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் அரசாங்கம் கம்யூனிஸ்டுகளை சிறை, சித்திரவதை, வன்முறை, சதி வழக்குகள் போன்ற பல வழிமுறைகளில் அடக்கி,ஒடுக்கி நிலைகுலைய வைத்து முடக்க முற்சிகளை மேற்கொண்டது.

1922 ஆம் ஆண்டு பெஷாவர் சதி வழக்கு 1

1923 ஆம் ஆண்டு பெஷாவர் சதி வழக்கு (மாஸ்கோ தாஷ்க்கன்ட் சதி வழக்கு) 2,3

1923 24 ஆம் ஆண்டு பெஷாவர் சதி வழக்கு 4

1923 24 ஆம் ஆண்டு கான்பூர் சதி வழக்கு

1927 ஆம் ஆண்டு பெஷாவர் சதி வழக்கு 5

1929 1933 ஆம் ஆண்டு மீரட் சதி வழக்கு

போன்ற சதி வழக்குகள் தேசிய அளவில் புனையப்பட்டன. இதைப்போலவே ஒவ்வொரு மாகாணங்களிலும் பல சதி வழக்குகளை பிரிட்டீஷ் அரசாங்கம் கம்யூனிஸ்ட்டுகள் மீது தொடுத்தது.

மாட்சிமை தாங்கிய பிரிட்டிஷ் மகாராணியிடமிருந்து பிரிட்டீஷ் இந்தியாவின் இறையாண்மைப் பறிப்பதற்கான சதிச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டி இந்தச் சதி வழக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக தொடுக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றன. கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன.

ஆனால்,இத்தகைய சதி வழக்குகள், சிறை, சித்திரவதை, வன்முறை அடக்குமுறை, ஒடுக்கு முறை, ஆகியவைகள் மூலம் கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சியை தடுக்க முடியவில்லை. இன்னும் சொல்லப்போனால், சதிவழக்குகளின் விசாரணையின் போது நீதிமன்றத்தையே கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் திட்டத்தை மக்கள் மத்தியில் பரப்புகின்ற பிரச்சார மேடையாக கம்யூனிஸ்ட் தலைவர்கள் மாற்றி விட்டார்கள். இது உழைக்கும் வர்க்கத்திற்கு மேன்மேலும் உத்வேகமூட்டியது. கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு வளர்ந்து பரவியது. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் 1934 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், சட்டப்பிரிவு 1908/14 ன் படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு சட்டவிரோத அமைப்பு என தடை செய்தது.

இதே காலகட்டத்தில், ஏற்கனவே தடை செய்யப்பட்டிருந்த காங்கிரஸ் கட்சியை ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் சட்டபூர்வமாக செயல்படலாம் என பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்து, 1934 ஆம் ஆண்டு ஜூன் மாதம் காங்கிரஸ் மீது இருந்த தடையை நீக்கியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட சூழலில், பல தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், தலைமறைவாக வாழ்ந்த கம்யூனிஸ்டுகளும், கம்யூனிஸ்ட் கட்சியை நோக்கி வந்து கொண்டிருந்த தொழிலாளர்களும், விவசாயிகளும், மற்றவர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தனர். கட்சி அமைப்பு பிளவுபட்டு சீர்குலையும் நிலைக்கு தள்ளப்பட்டது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், சர்வதேச கம்யூனிச இயக்கம் இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் எப்படி செயல்படுவது என வழிகாட்டியது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் 7 வது மாநாடு 1935 ஆம் ஆண்டு கூடிய போது, அதன் பொதுச்செயலாளர் தோழர் ''ஜார்ஜ் டிமிட்ரோவ்'' அவர்கள் ''இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் சகல ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் ஆதரவு கொடுப்பதோடு, அவற்றில் பங்கேற்கவும் வேண்டும். கம்யூனிஸ்டுகள் தங்களது அரசியல் மற்றும் ஸ்தாபன சுதந்திரத்தை பாதுகாத்துக் கொண்டே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அமைப்பில் உள்ள அனைத்து ஸ்தாபனங்களுக்குள்ளும் புகுந்து தீவிரமாக பணியாற்ற வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, இந்திய மக்களின் தேசிய புரட்சி இயக்கத்தை மேலும் வளர்ப்பதற்கான முறையில் அவர்களின் மத்தியில் ''தேசிய புரட்சிகர பிரிவு'' ஒன்றை உருவாக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும்,

''இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள்ளும் அதற்கு வெளியிலும் உள்ள உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் அனைத்தையும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் ஒன்றிணைக்க வேண்டும். மேலும், இந்த அணியை விரிவுபடுத்தி, ஏகாதிபத்திய அடக்குமுறைகளுக்கு எதிராக மக்களை திரட்டி மாபெரும் போராட்டங்களை, கம்யூனிஸ்டுகள் முன்நின்று நடத்த வேண்டும்''என்றும்,

''பரந்த அளவில் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் ஐக்கிய முன்னணியை கட்டுவதற்கு உதவும் அடிப்படையில் வெகு மக்களுக்கான கோரிக்கைகள் அடங்கிய திட்டம் ஒன்றை இந்தியக் கம்யூனிஸ்டுகள் உருவாக்க வேண்டும்'' என்றும் அறைக்கூவல் விடுத்தார்.

இதே போல், பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளான ''ரஜினி பாமீதத், பென் பிராட்லி'' ஆகியோர்.

''இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது உறுப்பினர்களை காங்கிரஸில் சேர்ந்து கொள்ளுமாறும், அதேபோல் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குட்பட்ட மக்கள் பகுதியினரையும் காங்கிரஸ் கட்சியில் பதிவு செய்து கொள்ளுமாறும் கூற வேண்டும். மேலும்,கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கிற்குட்பட்ட தொழிற்சங்கங்களையும், விவசாய சங்கங்களையும் காங்கிரஸ் கட்சியுடன் ஒட்டுமொத்தமாக இணைத்துக் கொள்ளுமாறும் கூறவேண்டும் என்றும் வழிகாட்டினர்.



இந்த நிலையில், 1936 ஆம் ஆண்டு பம்பாய் மாகாணத்திலிருந்த நாகபுரியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி கூட்டம் ரகசியமாக நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அமைப்பாளராக தோழர் பி.சி ஜோசி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில்,கம்யூனிஸ்டுகள் மூன்று விதமான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

1) கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் என்ற முறையில் கட்சிக் கூட்டங்களை ரகசியமாக நடத்தி விவாதித்து முடிவு எடுப்பது,

2) காங்கிரஸ் உறுப்பினர்களாக சேர்ந்து காங்கிரசின் கூட்டங்களில் மாநாடுகளில் இயக்க வேலைகளில் பங்கேற்பது,

3) காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாக சேர்ந்து அதன் கூட்டங்களில் மாநாடுகளில் கலந்து கொள்வதோடு வெகுமக்கள் அமைப்புகளை உருவாக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபடுவது,

இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவின்படி இந்தியாவில் பல பகுதிகளில் இத்தகைய நடவடிக்கைகளில் கம்யூனிஸ்டுகள் ஈடுபட்டனர்.

சென்னை மாகாண காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு 1936 ஆம் ஆண்டு சேலம் நகரில் நடத்தப்பட்டது. தோழர் எஸ்.வி காட்டே அவர்களின் வழிகாட்டுதல்படி நடந்த அந்த மாநாட்டில் பொதுச் செயலாளராக தோழர் ப.ஜீவானந்தமும், கூட்டுச்செயலாளர்களாக தோழர் பி சீனிவாசராவ் மற்றும் தோழர் நீலாவதி சுப்பிரமணியம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

1936 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் உத்தரபிரதேசத்தில் உள்ள லக்னோவில் காங்கிரஸ் கட்சியின் மாநாடும், அதையொட்டி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் மாநாடும் நடைபெற்றது. இந்த மாநாட்டில் தோழர்கள் ஜீவாவும், சீனிவாசராவும் கலந்து கொண்டனர்.

இதே காலகட்டத்தில், சென்னை மாகாணத்தின் தலைநகரான சென்னையில் 1936 ஆம் ஆண்டில் முதன் முதலாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்சிக்கிளை ஒன்று உருவாக்கப்பட்டது. தோழர்கள் எஸ்.வி.காட்டே, பி.சுந்தரய்யா ஆகியோரின் முடிவின்படியும், பரிந்துரையின் படியும் துவங்கப்பட்ட இந்த முதல் கட்சி கிளையில் தோழர்கள் ஜீவா, பி சீனிவாச ராவ், பி.ராமமூர்த்தி, ஏ.எஸ்.கே.ஐயங்கார், சி.எஸ்.சுப்பிரமணியம், கே. முருகேசன், நாகர்கோவில் சி.பி.இளங்கோ, டி. ஆர்.சுப்பிரமணியம், திருத்துறைப்பூண்டி முருகேசன் ஆகியோர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். மினிட் எழுதிய சி.எஸ்.சுப்பிரமணியம் இந்த கிளையின் செயலாளராக இருந்தார். இந்தக் கிளை ரகசியமாக செயல்பட்டது.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் லட்சியத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல ஒரு பத்திரிக்கை துவங்க வேண்டும் என்று முடிவு செய்து ''ஜனசக்தி'' பத்திரிக்கை துவங்கப்பட்டது. அதன் ஆசிரியராக தோழர் ஜீவா பொறுப்பேற்றார்.

இவ்வாறு கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் கட்சிக்குள்ளும், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிக்குள்ளும் செயல்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் 1937 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 மாகாணங்களில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் காங்கிரஸ் அமைச்சரவைகள் செயல்பட்ட காலத்தில் பல்வேறு காங்கிரஸ் கமிட்டிகளின் நிர்வாகப் பொறுப்புகளுக்கு கம்யூனிஸ்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியான ஏ ஐ சி சி இல் 20க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர்கள் அங்கம் வகித்தனர்.

பிரிட்டீஷ் ஆட்சியாளர்களால் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்த காலகட்டத்தில் அரைகுறையான அளவில் சட்டபூர்வ கட்சிப் போல் செயல்பட்டது. ஆனால், பிரிட்டிஷ் அரசு, கம்யூனிஸ்ட் கட்சியின் மீது இருந்த தடையை ரத்து செய்யவில்லை. 1938 ஆம் ஆண்டு ''நேஷனல் பிரண்ட்'' என்ற ஆங்கில பத்திரிக்கையும், ''கிராந்தி'' என்ற மராத்திய மொழி பத்திரிக்கையும் கட்சியின் சார்பாக வெளியிடப்பட்டன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட நிலையிலும் தலைமறைவாக இயங்கிக் கொண்டு ஒரு அகில இந்திய அளவிலான அமைப்பாக உருவானது. அதே வேளையில், கம்யூனிஸ்டுகள் பெருவாரியாக காங்கிரஸ் கட்சிக்குள்ளே செயல்பட்டு வந்தனர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்...

மல்லை சி.ஏ.சத்யா
துணைப் பொதுச் செயலாளர்
மறுமலர்ச்சி திமுக

# காலத்தை வென்ற கார்ல் மார்க்ஸ்!

### கார்ல் மார்க்ஸ் நினைவாலயம்

கடந்த 17.06.25 செவ்வாய்க்கிழமை அன்று இங்கிலாந்து தலைநகர் லண்டன் மாநகரில் உள்ள ஹைக்கெட் கல்லறைத் தோட்டத்தில் அமைந்துள்ள தத்துவ ஞானி கார்ல் மார்க்ஸ் நினைவாலயத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கலைமாமணி பெருந்தமிழன் டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்களுடன் சென்று செவ்வணக்கம் செலுத்தி விட்டு வந்தேன்.

அவரின் கல்லறை வாசகம் ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’.

1883 ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸ் இயற்கை எய்திய போது அவரின் காதல் மனைவி ஜென்னி நல்லடக்கம் செய்யப்பட்ட கல்லறைக் குழியிலேயே வைத்து அடக்கம் செய்யப்பட்டார்.

பின்னர் தி கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சியின் நிதி உதவியால் 1954 ஆம் ஆண்டு கார்ல் மார்க்சின் உடல் தோண்டி எடுக்கப்பட்டுத் தற்போது இருக்கும் இடத்தில் மறு அடக்கம் செய்யப்பட்டது. அதன்மீது 12 அடி உயரம் பீடம் அமைத்துப் புகழ்பெற்ற சிற்பி லாரன்ஸ் பிராட்ஷா அவர்களால் வடிவமைக்கப்பட்ட வெண்கலத்தாலான கார்ல் மார்க்சின் மார்பளவு சிலை வைத்து இங்கிலாந்து கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் ஹாரி பாலிட் அவர்களின் தலைமையில் 1956 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

### அவமதிப்பு

கார்ல் மார்க்ஸ் கல்லறைக் குயிலாக மாறியபோதும் ஆதிக்க வர்க்கத்திற்கு உறுத்தலாகவே இருந்து வருகிறார். தமிழ் நாட்டில் சனாதன சக்திகளால் தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் ஆகியோரின் சிலைகள் அவமதிப்புக்கு உள்ளாவதைப் போன்று 1961 ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸ் அவர்களின் நினைவுப் பீடத்தில் ஆரிய இனமே உயர்ந்த இனம் என்ற சர்வாதிகாரி பாசிஸ்ட் அடால்ப் இட்லரின் மஞ்சள் நிற ஸ்வஸ்திக் சின்னம் வரையப்பட்டு அவமதிப்புக்கு உள்ளானது.

பின்னர் 1970 ஆம் ஆண்டு இரண்டு குண்டுகள் போட்டு நினைவிடத்தைச் சேதப்படுத்தினார்கள். அதற்குப் பின்னர் 24 மணிநேரமும் கண்காணிப்புக் கேமரா பொருத்தப்பட்டுக் கண்காணித்து வருகின்றனர்.

ஆக ஏகாதிபத்தியத்திற்கு எதிரானவர்கள் மறைந்தாலும் அவர்கள் கொள்கை வழியாக வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கு இவை சாட்சி.

### விதைக்கப்படுகின்றார்கள்

போராளிகளும் புரட்சியாளர்களும் புதைக்கப் படுவதில்லை விதைக்கப்படுகின்றார்கள்.

முடிவதற்கு என்றே எழுதப்பட்ட கவிதைகள் வரிகள் அல்ல உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள் என்பது.

கரைந்து காணாமல் போகும் ஓவியமும் அல்ல அறிஞர் கார்ல் மார்க்ஸ் மார்பளவு வெண்கலச் சிலை அது யுகங்கள் தோறும் உழைக்கும் மக்களின் முகவரி.

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்காது என்பது எவ்வளவு உண்மை.

உலகத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய கார்ல் மார்க்ஸ் நினைவாலயத்தைப் பார்வையிட உலகம் முழுவதிலுமிருந்தும் மக்கள் புண்ணிய பூமிக்கு யாத்திரை வருவதைப் போன்று வருகின்றனர். ஹைகேட் கல்லறைத் தோட்டம் புயலுக்கு முன்னே நடைபெறும் பூகம்ப அமைதி.

நுழைவு வாயிலில் வரவேற்றுக் கல்லறைத் தோட்டத்தின் வரைபடம் கொடுத்து அனுப்பு கின்றனர். மக்கள் கைகளில் பூக்களும் மெழுகுவர்த்தியும் எடுத்துச் சென்று தங்களை ஆட்கொண்ட தலைவர் தோழர் கார்ல் மார்க்ஸ் நினைவிடத்தில் வைத்துத் தங்களின் இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றனர்.

அன்பின் தோழமைகளே ஒரு அறிஞரின் சிறப்பு என்பது அவரின் மறைவிற்குப் பின்னர் மக்கள் எவ்வாறு அவரைப் போற்றுகின்றார்கள் என்பதைப் பொறுத்தே உள்ளது. அந்தவகையில் அவர் மறைந்து 143 ஆண்டுகள் ஒரு நூற்றாண்டு முடிந்து இரண்டாம் நூற்றாண்டின் பெரும் பகுதி உருண்டோடிக்கொண்டு இருக்கிறது. இன்று உலகம் முழுவதிலும் மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை 150 கோடி பேர். ஆனால் 14.03.1883 ஆம் ஆண்டு அவர் இயற்கையைத் தழுவும் போது அவரின் இறுதி ஊர்வலத்தில் அறிஞர்




ஏங்கல்ஸ் உடன் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 13 பேர் மட்டுமே. பின்னர் எப்படி 150 கோடி மக்கள் அவரின் கொள்கையைப் பின்பற்றுகின்றார்கள். அதுதான் கார்ல் மார்க்சின் மகத்துவம்!

வரலாற்று அறிஞர் மைக்கேல் ஹெச் ஹார்ட் தன்னுடைய புதிய வரலாறு படைத்த 100 பேர் நூலில் குறிப்பிட்டுள்ளார். அறிவியல் சார்ந்த, சமதர்மத்தை வகுத்தவருள் முதன்மையானவர் கார்ல் மார்க்ஸ். அவரின் கொள்கைகளை மனித குல வரலாறு முழுவதும் உற்று நோக்கும் போது உலக மக்கள் தொகையின் சதவீதத்திலும் இத்தனை பேர் வேறு எந்தக் கொள்கையையும் இந்த அளவு பின்பற்றவில்லை.

### தத்துவம்

கார்ல் மார்க்ஸ் 05.05.1818 ஆம் ஆண்டு ஜெர்மனியில் ட்ரையர் நகரில் பிறந்தார். தன்னுடைய தந்தையைப் போலவே வழக்கறிஞர் ஆகவேண்டும் என்று விரும்பித் தனது 17 வயதில் பான் பல்கலைக்கழகம் சென்றார். ஆனால் ஜெனா பல்கலைக்கழகத்தில் தத்துவம் பயின்று பட்டம் பெற்றார்.

### காதல் திருமணம்

அழகில் சிறந்த செல்வச் சீமாட்டி ஜென்னியைக் காதலித்து கரம் பற்றினார் கார்ல் மார்க்ஸ்.

### நாடு கடத்தல்

அதிகாரவர்க்கத்தின் ஆரக்கால்களை அசைத்துப் பார்த்த அவரின் தீவிர அரசியலின் காரணமாக ஜெர்மனியில் இருந்து பிரான்சு செல்ல வேண்டிய நிலை. பின்னர் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டு நார்வே நாட்டின் பிரசல்ஸ் செல்கின்றார். பின்னர் அங்கிருந்து கொலோன் நகருக்கு வந்தார். பின்னர் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் மைட் லேண்ட் பார்க் பகுதியில் குடியேறி அவர் இயற்கையைத் தழுவும் 1883 வரை அங்கேயே வாழ்ந்தார்.

### கம்யூனிஸ்ட் அறிக்கை

தம் வாழ்வின் பெரும் பகுதியை லண்டனில் மனித குலத்தின் மீட்சிக்கு வழி என்ன என்ற ஆராய்ச்சியிலும் பொருளியல் குறித்த நூல்களை எழுதுவதிலும் கழித்தார். 1847 ஆம் ஆண்டு ‘வறுமையின் தத்துவம்’ என்ற புத்தகத்திற்குப் பதிலளிக்கும் வகையில் ‘தத்துவத்தின் வறுமை’ என்ற புகழ்பெற்ற நூலையும், பின்னர் ஏங்கல்ஸ் உடன் இணைந்து ‘கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை’ என்னும் நூலையும் எழுதினார்.

### மூலதனம்

1867 ஆம் ஆண்டு மூலதனம் டாஸ் காப்பிட்டல் என்ற புகழ்பெற்ற நூலின் முதற்பதிப்பை வெளியிட்டார். 1883 அவரின் மறைவிற்குப் பின்னர் கார்ல் மார்க்ஸ் தொகுத்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைத் தொகுத்து இரண்டு தொகுதிகளாக அறிஞர் ஏங்கல்ஸ் பதிப்பித்து வெளியிட்டார்.

### மார்க்சியம்

மார்க்சியம் என்பது இயக்கவியல் பொருள் முதல்வாதச் சிந்தனை இயக்கவியல் விதிகளை கொண்டு வரலாற்றைப் பார்க்கச் சொன்னார். அதுவே பொருள் முதல்வாதம். மார்க்சியத்தின் அடிப்படை கூட்டு உழைப்பு, கூட்டுச் சிந்தனை, சர்வதேசப் பார்வை, உழைக்கும் மக்கள் கருத்தால் கரத்தால் ஒன்றுபட்டு முதலாளித்துவம் இல்லாத சமத்துவச் சமுதாயம் உருவாக வேண்டும் என்று தீர்வு சொன்னவர் கார்ல் மார்க்ஸ்.

### இழப்பதற்கு ஒன்றுமில்லை

முதலாளித்துவத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் மோதல் ஏற்பட்டால் வெற்றி பெறுவது தொழிலாளர் வர்க்கமே காரணம் தொழிலாளர்களிடம் இழப்பதற்கு எதுவும் இல்லை அடிமைச் சங்கிலியைத் தவிர எது கிடைத்தாலும் வெற்றிதான்.

### உலக வரலாறு

நிலப்பிரபுத்துவ, பூர்ஷ்வாக்களாலும் உழைப்புத் திருடர்களாலும், அட்டைப்பூச்சியைப் போன்று தொழிலாளர் வர்க்கத்தின் ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக் கொழுத்த முதலாளித்துவத்தை வீழ்த்த உலக நாடுகளில் தேசிய இனங்களின் விடுதலையை முன்னெடுத்த மாமனிதர் லெனின், மாவோ, ஃபிடல் காஸ்ட்ரோ, சன்யாட்சன், ஹோசிமின் போன்ற வரலாற்று நாயகர்களின் புரட்சிக்கு அடிநாதமாக விளங்கியது மார்க்சியம். உலகெங்கும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டப் பேராயுதம் மார்க்சியம்!

# சொத்து வரி உயர்வைக் கைவிடுக!

## சிபிஐ மத்திய மண்டலக் குழு மாநாட்டில் தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய மண்டலக் குழு மாநாடு ஞாயிற்றுக்கிழமை காலை காந்திபுரத்தில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு மூத்த தோழர் ஏ.சுப்பிரமணியம், என்.நந்தகுமார், கலை அஸ்வினி ஆகியோர் தலைமை தாங்கினர். மறைந்த தோழர் ஆர்.தேவராஜ் உருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தப் பட்டது.

மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் பொன்னான் ஏற்றி வைத்தார். மாவட்டக் குழுவின் சார்பில் மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ் ஆகியோர் விளக்க உரை ஆற்றினர்.

இதில் கோயமுத்தூர் மாநகராட்சி அபரிமிதமான வரிகளை விதித்து வருகிறது. பல்வேறு அரசியல் கட்சிகளும், பொது நல அமைப்புகளும் உயர்த்தப்பட்ட வரியைத் திரும்பப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியும், இந்த விஷயத்தில் எவ்வித அசைவுமின்றி மாநகராட்சி நிர்வாகம் அலட்சியமாக இருக்கிறது.

வீட்டு வரி மற்றும் சொத்து வரி உயர்வு என்பது பொதுமக்களைக் கடுமையாக பாதித்துள்ளன. எனவே, இந்த வரி உயர்வுகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் 15 பேர்கள் கொண்ட மண்டலக் குழுவும், புதிய நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட்டனர். மத்திய மண்டலக் குழுவின் செயலாளராக கலை அஸ்வினி,



மண்டலக் குழு துணைச் செயலாளர்களாக என்.நந்தகுமார், பி.அறிவொளி ஆகியோரும் பொருளாளராக கே.ரவீந்திரனும் ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

வரும் ஜூலை 19, 20 தேதிகளில் பெரியநாயக்கன்பாளையத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டுப் பேரணியில் மத்திய மண்டலத்திலிருந்து 200 பேர்கள் கலந்து கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

### கோவில்பட்டி ஏஐடியுசி

## ஆட்டோ தொழிலாளர் சங்க தாலுகா நிர்வாகிகள் தேர்வு



தூத்துக்குடி மாவட்ட ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர் சங்க, தாலுகா கூட்டம் கோவில்பட்டி ஜீவா இல்லத்தில், சங்க மாவட்டச் செயலாளர் பாபு தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சி நகரச் செயலாளர் செந்தில் ஆறுமுகம் முன்னிலை வகித்தார். சங்க மாவட்டப் பொதுச்செயலாளர் பாலசிங்கம் ஆட்டோ சங்கத் தொழிலாளர்கள் நலவாரியம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

இதில் கோவில்பட்டி வட்டாரத் தலைவராக ராஜேஷ்குமார், செயலாளராக சுரேஷ்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சிபிஐ நகரத் துணைச் செயலாளர்கள் அலாவுதீன், விஜயலட்சுமி, நகரக் குழு உறுப்பினர்கள் சங்கர், அய்யாசாமி, கண்ணன், சுமைதூக்கும் தொழிலாளர்கள் சங்கத் தலைவர் வள்ளிராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மேலவளவு தியாகிகள் சிலைகளுக்கு அஞ்சலி



மதுரை மாவட்டம் மேலூர் அருகே மேலவளவு தியாகிகளுக்கு மேலூர் ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் சுரேஷ் அவர்கள் தலைமையில் கோசம் எழுப்பி சிலைகளுக்கு மாலை அணிவித்தனர். இதில் மாவட்டச் செயலாளர் பிமுத்துவேல், துணைச் செயலாளர் மெய்யர், நிர்வாகக் குழு தோழர்கள் மாவட்டக் குழு தோழர்கள், ஒத்தக்கடை நகரச் செயலாளர் திருப்பதிராஜா, அலங்கை ஒன்றியம் குமரேசன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## உயர்த்தப்பட்ட வரிகளை திரும்பப் பெறுக!

### கோவை மேற்கு மண்டல மாநாட்டில் தீர்மானம்






கட்சியின் கோவை மேற்கு மண்டல நான்காவது மாநாடு பி.என்.புதூரில் மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், கே.சாந்தி சந்திரன் எம்.சி, பி.பழனிச்சாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மௌனசாமி சி.தங்கவேலு ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் செயலாளராக என்.சந்திரன், துணைச் செயலாளராக என்.மோகன், பொருளாளராக சி.ஜீவா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநகராட்சியில் உயர்த்தப்பட்ட வீட்டு வரி, குப்பை வரி மற்றும் குடிநீர்க் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும். ஒன்றிய அரசு உயர்த்திய ரயில் கட்டண உயர்வைத் திரும்பப் பெற வேண்டும். கோவை 41 வது வார்டு ஐஸ்வர்யா நகர் மற்றும் முல்லை நகர் பகுதிகளில் காட்டுப்பன்றிகள் தொல்லை அதிகரித்து வருகிறது. காட்டுப் பன்றிகளை முழுவதுமாக கூண்டு வைத்துப் பிடித்து, நிரந்தரத் தீர்வு காண வனத்துறை அதிகாரிகளை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

### இருதய மருத்துவ நிபுணர்

## டாக்டர் டி.கார்த்திகேயன் பணி நிறைவுப் பாராட்டு விழா

சென்னை ஓமந்தூரார் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் இருதய மருத்துவ நிபுணர் டாக்டர் மேஜர் டி.கார்த்திகேயன் 24.06.2025 அன்று பணி ஓய்வு பெற்றார். அவருக்கான பணி நிறைவுப் பாராட்டு விழா, ஓமந்தூரார் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ஆர்.மணி தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் ஆர்.நவீன்ராஜா வரவேற்றார். துறைத் தலைவர் டாக்டர் ஜெ.சிசிலி மேரி மஜிலா, சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, நிலைய மருத்துவ அதிகாரி, மருத்துவக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட ஏராளமான மருத்துவர்கள் வாழ்த்துரை வழங்கினர். டாக்டர் கார்த்திகேயன் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பயின்ற பொழுது, அனைத்திந்திய மருத்துவ மாணவர் பெருமன்றத்தில் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் அவர்களுடன் செயல்பட்டவர். பல போராட்டங்களில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிபில் ஸ்கோரைக் கைவிடக் கோரி குளித்தலையில் விவசாயிகள் பேரணி

சிபில் ஸ்கோரைக் கைவிடக் கோரி குளித்தலையில் விவசாயிகள் பேரணி நச்சலூர் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் அயிலை சிவ.சூரியன், காவிரிப் படுகைக் கூட்டமைப்புத் தலைவர் ஜெயராமன், நச்சலூர் மதியழகன், இளங்கோவன், அன்பழகன், ஜெகன்னாதன், ஜீவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ் மாசிலாமணி கண்டன உரையாற்றினார். சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் பேரணியாகச் சென்று மனுக்கள் கொடுக்கப்பட்டன. இதில் தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்புச் சங்கத்தின் நிறுவனர் ஈசன் முருகசாமி உரையாற்றினார். கட்சியின் கரூர் மாவட்ட முன்னாள் செயலாளர் நாட்ராயன், விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் செல்வம் ஆகியோர் பங்கெடுத்தனர்.

## தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் குடும்ப அட்டை பெற்றுத் தரப்பட்டது



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டம், அகரம் தென் கிராமம் சுப்பிமணியத் தெருவில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் சார்பில் குடும்ப அட்டை பெற்றுத் தரப்பட்டது. இதில் மாவட்டச் செயலாளர் க.ஜெகதீசன், மாவட்ட துணைச் செயலாளர் ஒய்.ஹாருன் பாஷா, மாவட்டக் குழு உறுப்பினர் எஸ்.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வெடிவிபத்தில் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல்



ஜுலை 1, 2025 அன்று சிவகாசி அருகில் உள்ள, சின்ன காமன் பட்டியில் நடந்த பட்டாசு ஆலை வெடிவிபத்தில், 10 பேர் மரணமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் நான்கு பேர் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்டச் செயலாளர் செந்தில்குமார், மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். மேலும் அவர்களுக்குச் சரியான சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்பதை அங்குள்ள மருத்துவமனை ஊழியர்களிடம் அறிவுறுத்தியுள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பட்டாசு ஆலைகள் விபத்து இல்லாமல் இயங்குவதற்குப் போதுமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கட்சியின் 25வது மாவட்ட மாநாட்டுக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று அரசிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். அவர்களுடன் சிவகாசி ஒன்றியச் செயலாளர் கலைவாசன், ஏஐடியுசி சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் முனியாசாமி, திருத்தங்கல் நகரச் செயலாளர் சுரேஷ் குமார், மாவட்டக் குழு உறுப்பினர் சமுத்திரம், மாதர் சங்கத் தோழர் அமுதராணி ஆகியோர் உடன் இருந்தனர்.

## மணிகண்டம் ஒன்றிய ஏஐடியுசி நிர்வாகிகள் கூட்டம்



மணிகண்டம் ஒன்றியத்தில் உள்ள ஏஐடியுசி அமைப்பின் நிர்வாகிகள் கூட்டம் சோமரசம்பேட்டை அலுவலகத்தில். கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் எம்.மருதாம்பாள் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏஐடியுசி திருச்சி மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.முருகன் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் பொது வேலைநிறுத்தம் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தரைக்கடை சங்க ஒன்றியத் தலைவர் தோழர் கே.என்.ஜெகநாதன் சிபிஐ மாவட்டக் குழு உறுப்பினர் தோழியர் எம்.ரஜியாபேகம் மாதர் சங்க ஒன்றியச் செயலாளர் பி.வித்யா கட்டடச் சங்க தேசியக் குழு டி.நிர்மலா உள்ளாட்சிச் செயலாளர் ஜே.நதியா இளைஞர் மன்றச் செயலாளர் ஏ.இன்னசென்ட் விமலா மேரி மற்றும் தோழர்கள் ஜெயபால், சகுந்தலா, பல்கீஸ்பானு, லெட்சுமிபிரபா, சித்ரா, சசிகுமார், பாப்பாத்தி, கவிதா, தனலெட்சுமி, அழகுநிலா, பார்வதி, தமிழரசி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு கூட்டம் முடிவில் தோழியர் டி.நிர்மலா நன்றி கூறினார்.

## புலவர் து.இராசகோபால் தலைமுறைகள் பேசும் ஆய்வாளர் கருத்தரங்கம்



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், திண்டுக்கல் மாவட்டக் குழு, தமிழ்நாடு அரசு, பொது நூலகத்துறை, மாவட்ட மைய நூலக வாசகர் வட்டம், வெற்றிமொழி வெளியீட்டகம், திண்டுக்கல் மற்றும் ராஜ் காட்சிக் கலைக்கூடம், நி.பஞ்சம்பட்டி. இணைந்து நடத்திய புலவர் து.இராசகோபால் தலைமுறைகள் பேசும் ஆய்வாளர் கருத்தரங்கம் 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்ட மைய நூலகம், பேருந்து நிலையம் அருகில், திண்டுக்கல்லில் நடைபெற்றது.

நிகழ்வினை மாவட்ட மையக் குழு உறுப்பினரும், மதுரை, கருமாத்தூர், அருள் ஆனந்தர் கல்லூரி (தன்னாட்சி), தமிழ்த்துறைத் தலைவர் (மேனாள்), பேரா.ஆ.ச.சேரிவாணன் தலைமையேற்று அனைத்து அமர்வுகளையும் சிறப்பாக நடத்தினார்.

## திருப்பூர் மாநகராட்சி சமுதாயக் கூடத்தை கே.சுப்பராயன் எம்.பி திறந்து வைத்தார்



திருப்பூர் மாநகராட்சி 11வது வார்டு, புதுக் காலனிப் பகுதியில் கே.சுப்பராயன் எம்.பி தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.43.20 இலட்சத்தில் அமைக்கப்பட்ட சமுதாய நலக்கூடம் மற்றும் நியாய விலைக்கட்டடத் திறப்பு விழா, மாமன்ற உறுப்பினர் எஸ்.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், மேயர் ந.தினேஷ் குமார், ஆணையாளர் அமித் ஐஏஎஸ், துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம், முதல் மண்டலத் தலைவர் உமாமகேஸ்வரி, மாநகர திமுக செயலாளர் தங்கராஜ், பகுதிச் செயலாளர் கொ.ராமதாஸ், அதிமுக தலைவர் வி.கே.பி.மணி, கல்வியாளர் சாமிநாதன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள் எஸ்.விஜயா, மண்டலத் துணைச் செயலாளர்கள் சக்திவேல், சதீஷ்குமார், கிளைச் செயலாளர்கள் சௌந்தர்ராஜன், மருதாசலம், அங்குசாமி, சேதுபதி, ரேணுகா மரகதம், கல்பனா மற்றும் பலர் பங்கேற்றனர்.

## நாகர்கோவில் மாநகரக் கிளை சார்பில் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, நாகர்கோவில் மாநகரக் கிளையின் சார்பில், கட்சியின் மாநகரச் செயலாளர் கே.நாகராஜன் தலைமையில் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநகரப் பொருளாளர் சி.நாகப்பன் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கிக் கட்சியின் மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ்சந்திர போஸ், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.சுரேஷ் மேசிய தாஸ் ஆகியோர் பேசினர். போராட்டத்தைக் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.அனில்குமார் முடித்து வைத்தார்.

இதில் மாநகர எல்லைக்குள் வசூலிக்கப்படும் வாகனக் கட்டணத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், மாநகராட்சிச் சாலைகளின் நடைபாதைகளைச் சீரமைக்க வலியுறுத்தியும், சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்திவரும் வலம்புரி உரக்கிடங்கு மலைமேட்டை உடனே சீரமைக்க வலியுறுத்தியும், மழைக்காலங்களில் சாக்கடை நீர், மழைநீரில் கலந்து சாலையில் ஆறாக ஓடுவதைத் தடுத்திட வலியுறுத்தியும், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஸ்கேன் சென்டரை உடனே சீர்செய்ய வலியுறுத்தியும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

## திருப்போரூர் தொகுதி மாநாடு



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி மாநாடு 6.7.2025 அன்று கணபதி நினைவரங்கில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் கந்தசாமி ஏற்றினார். ஆதிமூலம், கனகராஜ், பி.புவனேஸ்வரி ஆகியோர் தலைமையில், அஞ்சலித் தீர்மானத்தை ஒய்.ஹாருன் பாஷா வாசித்தார். பி.பிரபு வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டைத் துவக்கி வைத்து மாவட்டக் குழு உறுப்பினர் முனுசாமி சிறப்பு உரையாற்றினார். வெங்கடேசன், ஆதிமூலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இதில் செயலாளராக எம்.பார்த்திபன், துணைச் செயலாளராக வி.ஆதிமூலம், இ.முனுசாமி, பொருளாளராக ஒய்.ஹாருன் பாஷா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார், துணைச் செயலாளர்கள் வீராசாமி, பாலாஜி ஆகியோர் பங்கெடுத்தனர். மாநாட்டை நிறைவு செய்து முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் க.ஜெகதீசன் சிறப்புரையாற்றினார்.

கல்பாக்கம் அணுமின் நிலையம், ஜப்பான் சிட்டி, ஆலத்தூர் சிட்கோ, சிறுசேரி சிப்காட் உள்ளிட்ட தொழிற்சாலைகளில் உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கிடக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வெற்றி பெற்ற விற்பனைக் குழுப் பிரதிநிதிகள் இரா.முத்தரசன், கே.சுப்பராயனைச் சந்தித்து வாழ்த்து



தேர்தல் மூலமாக வெற்றி பெற்ற திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஏஐடியுசி தொழிற்சங்கம் சார்பில் விற்பனைக் குழு பிரதிநிதிகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நகர விற்பனைக் குழு தேர்தல் நடைபெற்று ஏஐடியுசி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அன்சர்தீன், முருகானந்தம், சுமதி ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், அகில இந்திய ஏஐடியுசி துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி ஆகியோரை திருச்சியில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## திருவள்ளூர் மாவட்ட இடைக்குழு மாநாடுகள்

### திருவள்ளூர் தாலுகா

கட்சியின் திருவள்ளூர் தாலுகா 25வது மாநாடு, தாலுகா செயலாளர் வி.சரவணன் தலைமையில் மணவாளன் நகரில் தோழர் பி.நந்தகோபால் நினைவு அரங்கத்தில் துவங்கியது.

மாநாட்டுக் கொடியினைக் கட்சியின் மூத்த தோழர் டி.பழனி ஏற்றினார். துணைச் செயலாளர் எஸ்.ராபின் வரவேற்புரையாற்றினார். மாநாட்டில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் துவக்க உரையாற்றினார். கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ராதாகிருஷ்ணன் அரசியல் விளக்க உரையாற்றினார். கே.கஜேந்திரன் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.மயில்வாகனன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.வி.செந்தில், எம்.ராஜேஷ்வரி, டி.கே.ராஜா, கே.ஆறுமுகம், நாகஜோதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் தாலுகா செயலாளராக வி.சரவணன், துணைச் செயலாளர்களாக டி.வெங்கடேசன், எஸ்.ராபின், பொருளாளராக டி.சத்யநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மூத்த தோழர்களை கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ராதாகிருஷ்ணன் கௌரவித்தார்.

### வில்லிவாக்கம் ஒன்றிய மாநாடு

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியத்தின் 6வது மாநாடு, துணைச் செயலாளர் வி.வெங்கடேசப் பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் பொன்.குமார் ஏற்றினார். துணைச் செயலாளர் எம்.சுரேஷ் சுப்பையா வரவேற்புரை ஆற்றினார். ஒன்றியப் பொறுப்பாளர் எஸ்.மயில்வாகனன் துவக்க உரையாற்றினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.இராதகிருஷ்ணன், மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.வி.செந்தில் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

ஒன்றியச் செயலாளராக வி.இ.ராஜீவ் காந்தி, துணைச் செயலாளராக வி.வெங்கடேசப் பெருமாள், பொருளாளராக எம்.சுரேஷ் சுப்பையா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### மீஞ்சூர் ஒன்றிய மாநாடு



திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் ஒன்றிய 10வது மாநாடு ஒன்றியக் குழு உறுப்பினர் ஜி.பாலன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினைக் கட்சியின் மூத்த தோழர் கே.வி.செங்கொடி செல்வன் ஏற்றினார். ஒன்றியக் குழு உறுப்பினர் கே.கிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். மாநாட்டில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் துவக்க உரையாற்றினார். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் வி.சரவணன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் என்.ஜிவா, வி.இ.ராஜீவ்காந்தி, இம்தியாஸ் பாஷா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இம்மாநாட்டில் செயலாளராக பி.வி.செந்தில், துணைச் செயலாளராக ரகுநாதன், பொருளாளராக எம்.பார்த்திபன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கட்சி நூற்றாண்டை முன்னிட்டு கோவை கண்ணம்பாளையத்தில்

## மாவட்ட அளவிலான கைப்பந்துப் போட்டி – இரத்த தான முகாம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டை முன்னிட்டு, தோழர் பாலதண்டாயுதம் அவர்களின் 52ஆம் ஆண்டுநினைவுநிகழ்வின்ஒருபகுதியாக சூலூர் கண்ணம்பாளையத்திலுள்ள தியாகிகள் கலையரங்க மைதானத்தில் மாவட்ட அளவிலான கைப்பந்துப் போட்டி கடந்த ஜுன் 28, 29 ஆகிய இரு தேதிகளில் நடைபெற்றது.

மாவட்ட முழுவதுமிருந்து 32 அணிகள் பங்கேற்றன. முதலிடம் பிடித்த கரும்புக்கடை வாலிபால் கிளப் அணிக்கு 5 அடி கோப்பையும், பரிசுத்தொகையாக ரூ.5000ம், இரண்டாம் இடம் பிடித்த டிரீம் ஸ்டார் அணிக்கு 4 அடி கோப்பையும் பரிசுத் தொகையாக ரூ.3000ம், மூன்றாம் இடம் பிடித்த ஹிஸ்டரி மேக்கர்ஸ் அணிக்கு 3.5 அடி கோப்பையும் பரிசுத் தொகையாக ரூ.2000ம், நான்காம் இடம் பிடித்த நேதாஜி வாலிபால் கிளப் அணிக்கு 3 அடி கோப்பையும் பரிசுத் தொகையாக ரூ.1000ம் வழங்கப்பட்டன.

இதில், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், மாவட்டக் குழு உறுப்பினர் பி.சுப்பிரமணியம், பாரதி பசியாற உணவு அறக்கட்டளை நிர்வாகி ஆர்.வேலுச்சாமி, மாதர் சம்மேளன நிர்வாகிகள் ர.மாலதி, மா.சரோஜினி உள்ளிட்டோர் பரிசுகளை வழங்கினர். இளைஞர் பெருமன்ற மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சு.பிரசாத், முன்னாள் வட்டாரச் செயலாளர் எம்.ஜீவராஜ், வட்டாரச் செயலாளர் கே.ஜி.பவன்குமார், நிர்வாகிகள் சு.பிரதாப், மா.விக்னேஷ், விஜயகுமார் உள்ளிட்டோரும், ஹிஸ்டரி மேக்கர்ஸ் குழுவினரும் இப்போட்டியினை முன்னின்று நடத்தினர்.

### இரத்ததான முகாம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டை முன்னிட்டு, தோழர் பாலதண்டாயுதம் அவர்களின் 52ஆம் ஆண்டு நினைவு நிகழ்வின் ஒரு பகுதியாக கண்ணம்பாளையம் பங்கயற் செல்வி கோவில் மண்டபத்தில் கடந்த 29.06.2025 அன்று கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம் நடைபெற்றது. முகாமிற்கு இயக்கத்தின் துணைத் தலைவர் கே.வினோத்கண்ணா தலைமை தாங்கினார். இயக்கச் செயலாளர் வே.வசந்தகுமார் வரவேற்புரையாற்றினார் மா.செல்வகுமார் ம.லதா, டி.தினேஷ்குமார் நித்யா தேவி ஆகியோர் குத்துவிளக்கேற்றி முகாமினைத் துவக்கி வைத்தனர்.

இம்முகாமில் 2 பெண்கள் உட்பட 97 பேர் இரத்த தானம் செய்தனர். இது பாலதண்டாயுதம் இரத்த தான இயக்கம் சார்பில் நடைபெறும் 39வது இரத்த தான முகாமாகும்.

# டிரம்ப் கிழித்த துணி!



த.லெனின்

**கிறுக்கன் கிழித்த துணி கோவணத்திற்கு உதவும் என்பார்கள். ஆனால், அமெரிக்க அதிபர் ட்ரம்பு கோவணத்தையே கிழித்து விட்டார்.**




அந்தவகையில் தற்போது அமெரிக்க அரசாங்கம் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன்மூலம் பெரும்பாலான பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புச் சலுகைகள், ஒய்வூதியங்கள், மீதான கூட்டாட்சி அரசுகளின் வருமான வரிகளை நீக்கும் ஒரு விதியை உள்ளடக்கியதாகும். அத்துடன், இது 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வரி செலுத்துவோருக்கு வரி விலக்கு அளிக்கிறது.

இது அமெரிக்காவின் மூத்த குடிமக்களுக்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேற்றமாகும்.'' என்று சமூகப் பாதுகாப்பு ஆணையர் பிராங்க் பிசிக்னானோ கூறினார். “கிட்டத்தட்ட 90 ஆண்டுகளாக, சமூகப் பாதுகாப்பு என்பது வயதான அமெரிக்கர்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பின் ஒரு மூலக்கல்லாக இருந்து வருகிறது. சலுகைகள் மீதான வரிச்சுமையைக் கணிசமாகக் குறைப்பதன் மூலம், சமூகப் பாதுகாப்பைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி டிரம்பின் வாக்குறுதியை இந்தச் சட்டம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது. மூத்த குடிமக்கள் தாங்கள் சம்பாதித்த ஓய்வூதியத்தைச் சிறப்பாக அனுபவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த உதவுகிறது என்றும் கூறியுள்ளார்.

ஆனால் உண்மை அப்படியாக இல்லை. ஓய்வுபெற்ற பலர் விரைவாக, ஏஜென்சியின் சில வார்த்தைகளைக் கேள்விக்குட்படுத்திக் கடிதம் எழுதி உள்ளனர். அதேநேரத்தில் வழக்கத்திற்கு மாறாக தங்களுக்குப் பாரபட்சமாகத் தோன்றியதைச் சுட்டிக்காட்டியும் வருகின்றனர். அதுவும் 2028 வரைதான் இது செயலில் இருக்கும் என்றும் வரையறுக்கப்பட்டிருப்பது உண்மையில் இது ஒரு ஏமாற்று வேலை என்பதைத் தோலுரித்துக் காட்டுகிறது. ஒரு பக்கம் ஓய்வூதியர்களுக்கு இது சலுகை போல் தோன்றினாலும் மறுபக்கம் பொதுமக்களுக்கான சமூக நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பெரும் நிதி வெட்டையும் கடைப்பிடித்து வருகிறது. ஆனால் பெரும் நிறுவனங்கள் மற்றும் உயர் வருமான பிரிவினர்களுக்கான வரியில் சலுகைகள் அறிவித்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில், டிரம்பின் “சமூகப் பாதுகாப்புக்கு வரி இல்லை'' என்ற கூற்று, மூத்த குடிமக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை மிகைப்படுத்துகிறது என்பது தெளிவு.

சமூகப் பாதுகாப்புச் சலுகைகள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் மருத்துவ உதவி, பாதுகாப்பானவை என்று டிரம்ப் பலமுறை தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உறுதியளித்துள்ளார். ஆனால் அவர் அமைத்த மஸ்க்கின் தொழில்நுட்பக் குழு, முக்கியமாக, தனிப்பட்ட வரி செலுத்துவோர் தகவல்களைக் கொண்ட தரவுத்தளங்களை அணுகும் வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் கூட அதைப் பயன்படுத்தவில்லை. அந்த உயர் பிரிவினர் மீது வரியும் விதிக்கவில்லை.

வலதுசாரி கருத்தாளர் ஜோ ரோகனுடன் நேர்காணலில், மஸ்க் சமூகப் பாதுகாப்பை “எல்லா காலத்திற்கும் மிகப்பெரிய திட்டம் இது'' என்று அழைத்தார். அதிக எண்ணிக்கையிலான நூறு வயதுடையவர்கள் மோசடியாக ஓய்வூதியப் பலன்களைப் பெறுகிறார்கள் என்ற மஸ்க்கின் குற்றச்சாட்டு பொய்யானது. ஆனால் காங்கிரசில் உரையாற்றும் போது டிரம்ப் அந்தப் பொய்யை மீண்டும் கூறியது கவனிக்கத்தக்கது.

இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாகத் தற்போது எலான் மஸ்க் தனிக் கட்சி ஆரம்பித்து விட்டார். இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதுதான் புதிய ட்ரம்பிசமாக, அதாவது அமெரிக்க மோடியிசமாகப் பார்க்கப்படுகிறது.

## வெட்டப்படும் வேலைவாய்ப்புகள்

இதுவரை இது 7,000 வேலைகளைக் குறைக்கும் திட்டங்களை அறிவித்துள்ளது. இது 73 மில்லியன் ஓய்வுபெற்ற மற்றும் ஊனமுற்ற அமெரிக்கர்களால் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு வலையத் திட்டத்தை இயக்கும் பொறுப்பில் உள்ள ஏஜென்சியில் எட்டுப் பதவிகளில் ஒன்றுக்கு இது சமமாகும். இப்படி இருக்கிற வேலை வாய்ப்பையும் முடித்துக் கட்டிவிட்டு, வரியை நீக்குகிறேன் என்றால் அதற்கு என்ன பொருள்?

## கல்வி நிறுவனங்கள் மீது தாக்குதல்

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஏற்கெனவே அறிவித்தபடி, ஆராய்ச்சி நிதி, வரிக் கொள்கை மற்றும் மாணவர் சேர்க்கை தொடர்பான தனது திட்டங்களையும், அச்சுறுத்தல்களையும் செயல்படுத்தினால், ஹார்வர்ட் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் 1 பில்லியன் டாலர் பட்ஜெட் பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும் என்று தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல் மதிப்பிடுகிறது. அத்துடன், ஹார்வர்ட் அனைத்துக் கூட்டாட்சி ஆராய்ச்சி நிதி, கூட்டாட்சி மாணவர் உதவி மற்றும் சர்வதேச மாணவர்களைச் சேர்க்கும் திறனை இழக்கும் மோசமான சூழலுக்கு தள்ளப்படும் என்று கூறியுள்ளது.

## குறை வருமானப் பிரிவினர் மீதான தாக்குதல்

குறைந்த வருமானம் கொண்ட அமெரிக்கர்களுக்கு வழங்கப்படும் வீடுகள் திட்டத்திற்கு, அச்சுறுத்தல் தரும் வகையில், மலிவு விலை வீடுகளைப் பாதுகாக்க உதவும் 1 பில்லியன் டாலர் உதவித் திட்டத்தை டிரம்ப் நிர்வாகம் நிறுத்திவிட்டது.

இந்நடவடிக்கை அமெரிக்க வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வெட்டுக்கள் மற்றும் நிதி முடக்கங்களின் ஒரு பகுதியாகும். இது பெரும்பாலும் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் எலோன் மஸ்க்கின் அரசாங்கச் செயல்திறன் துறையின் வழிகாட்டுதலின் பேரில் மேற்கொள்ளப்பட்டது என்பது கூடுதல் தகவல்.

## குடியுரிமை மீது தாக்குதல்

அமெரிக்காவில், பெற்றோரின் குடியுரிமை அல்லது குடியேற்ற நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், அந்நாட்டு மண்ணில் பிறந்த குழந்தைக்குத் தாமாக குடியுரிமை வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான சட்டம் 1868ம் ஆண்டு முதல் அமலில் இருந்து வருகிறது. தற்போது இதை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார் டிரம்ப். அவர் கையெழுத்திட்ட நிர்வாக உத்தரவில், அமெரிக்காவில் பிறக்கும் குழந்தை குடியுரிமை பெற, குறைந்தபட்சம் ஒரு பெற்றோராவது அமெரிக்கக் குடிமகனாக, சட்டப்பூர்வ நிரந்தரக் குடியிருப்பாளராக (கிரீன் கார்டு வைத்திருப்பவர்) அல்லது அமெரிக்க ராணுவத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைத் தவிர்த்து, தந்தை அமெரிக்கக் குடிமகனாக இல்லாவிட்டாலோ, சட்டப்பூர்வமான நிரந்தரக் குடியுரிமை இல்லாதவர் என்றாலோ அல்லது தாய் சட்டவிரோதமாகக் குடியேறியவர் அல்லது மாணவர், சுற்றுலா விசாவில் வந்திருப்பவர் என எப்படி இருந்தாலும் அவருக்குப் பிறக்கும் குழந்தைக்குத் தாமாக குடியுரிமை கிடைக்காது என்பது டிரம்ப் அரசின் புதிய கொள்கையாகும். இது இந்தியர்களுக்கும் எதிரானது என்பது புரியும்!

## மீண்டும் வரி உயர்வு மிரட்டல்!

ஏற்கெனவே சீனப் பொருள்களுக்கு அதிக வரியை விதித்து பதிலுக்கு அவர்களும் வரியை விதித்து ஒரு பாதிப்பை ஏற்படுத்தின. சீனா அரிய வகை தனிமங்கள் அமெரிக்க ஏற்றுமதிக்குத் தடை விதித்திருந்தது. இதில் நிலை குலைந்து போன அமெரிக்கா உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வரி விதிப்பைத் திரும்பப் பெற்றது. அந்த வகையில்தான் தற்போது மீண்டும் ஜப்பான் உள்ளிட்ட 14 நாடுகளுக்கு வரிகளை உயர்த்தி ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு 25 சதவீதம் விதிக்கப்படுவதாக அறிவித்த சில மணி நேரங்களில், மேலும் 12 நாடுகளுக்கு வரிகளை உயர்த்தியுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பட்டியலிட்டுள்ளார். மியான்மர், தென்னாப்பிரிக்கா, மலேசியா, வங்கதேசம், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு வரிகளை அவர் உயர்த்தியுள்ளார். அந்நாடுகளுக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், தனது ட்ரூத் சமூக வலைத்தளத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பட்டியல் :

| நாடுகள் | வரி சதவீதம் |
|---|---|
| தென் கொரியா | 25% வரி |
| ஜப்பான் | 25% வரி |
| மியான்மர் | 40% வரி |
| லாவோஸ் | 40% வரி |
| தென்னாப்பிரிக்கா | 30% வரி |
| கஜகஸ்தான் | 25% வரி |
| மலேசியா | 25% வரி |
| துனீசியா | 25% வரி |
| இந்தோனேசியா | 32% வரி |
| போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா | 30% வரி |
| வங்கதேசம் | 35% வரி |
| செர்பியா | 35% வரி |
| கம்போடியா | 36% வரி |
| தாய்லாந்து | 36% வரி |

மேலும் “அமெரிக்காவுக்கு எதிரான இந்த நீடித்த வர்த்தகப் பற்றாக்குறைக்குக் காரணமான பல ஆண்டுகால வரி மற்றும் வரி அல்லாத கொள்கைகள் மற்றும் வர்த்தகத் தடைகளைச் சரிசெய்ய இந்த வரிவிதிப்பு அவசியம் என்பதைத் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். இந்தப் பற்றாக்குறை எங்கள் பொருளாதாரத்துக்கும், எங்கள் தேசியப் பாதுகாப்புக்கும் ஒரு பெரிய அச்சுறுத்தலாகும்'' என்று இது குறித்து இந்த நாடுகளுக்கு எழுதிய கடிதத்தில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## பிரிக்ஸ் நாடுகளுக்கு மிரட்டல்

முன்னதாக, பிரிக்ஸ் கூட்டமைப்பின் அமெரிக்க விரோதக் கொள்கைகளை ஆதரிக்கும் நாடுகளுக்குக் கூடுதலாக 10% வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரித்தார். அமெரிக்க நிர்வாகம் புதிய வரி விதிப்பு மற்றும் திருத்தப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அதிகாரபூர்வமாகக் கடிதம் அனுப்பப்படும் என்று கூறியிருந்தார். அதன் முதல்கட்டமாக தற்போது ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட 14 நாடுகளுக்கு ட்ரம்ப் கடிதம் அனுப்பியுள்ளார். இந்தியாவிற்கும் கடிதம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் நமது பிரதமர் மோடி உலக சண்டியர் ட்ரம்ப் மீது இன்றுவரை எதுவும் குறிப்பிடவில்லை. இது அவரது அமெரிக்கா விசுவாசத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது! அவரது தேசபக்தியோ படபடத்து நிற்கிறது!

தொடர்புக்கு : 9444481703

## கொள்ளையடிக்க எல்லையில்லா சுதந்திரம்!

அமெரிக்க வர்த்தக நிறுவனமான ஜேன் ஸ்ட்ரீட் இந்தியப் பங்குச்சந்தையில், ஜனவரி 2023 முதல் மே 2025 வரையிலான காலகட்டத்தில், பங்குகள், ஃபியூச்சர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் (தி–ஊ) சந்தைகளில் ஒரே நேரத்தில் பந்தயம் கட்டி, குறியீடுகளைக் கையாண்டு லாபம் ஈட்டியதாக பங்குச் சந்தை ஒழுங்குமுறை அமைப்பான செபி கண்டறிந்துள்ளது.

இதைத் தொடர்ந்து, ஜேன் ஸ்ட்ரீட் இந்தியச் சந்தையில் வர்த்தகம் செய்யத் தடை விதிக்கப்பட்டு, ரூ.4,843 கோடி அளவிலான அதன் லாபம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், செபி இவ்வளவு காலம் ஏன் அமைதியாக இருந்தது? மோடி அரசு யாருக்காகக் கண்களை மூடிக்கொண்டிருந்தது?

ஃபியூச்சர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் (தி–ஊ) சந்தை பெரிய முதலீட்டாளர்களுக்கு விளையாட்டு மைதானமாக மாறிவிட்டது, சிறிய முதலீட்டாளர்கள் தொடர்ந்து பணத்தை இழந்து வருகின்றார்கள். சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

# வருசநாட்டு மலைப்பாதைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்





## விருதுநகர் மாவட்ட 25வது மாநாடு தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட 25வது மாநாட்டுப் பேரணி தொடங்கி, தேசபந்து மைதானத்தை வந்தடைந்தது. கரகாட்டம், சிலம்பு, புலி வேஷம் போன்ற கலை அம்சங்களுடனும் இந்தப் பேரணி சிறப்புற அமைந்தது. பே

பரணி முடிந்த பின்பு தேசபந்து மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி தலைமை வகித்தார். கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன், தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கட்சியின் மாவட்ட பிரதிநிதி மாநாடு 04.07.2025 அன்று விருதுநகரில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் எஸ்.பழனிக்குமார் ஏற்றினார். மாவட்டத் துணைச் செயலாளர் க.சமுத்திரம் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார். விருதுநகர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.சக்கணன் வரவேற்புரை ஆற்றினார். கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி துவக்க உரையாற்றினார். விருதுநகர் மாவட்டச் செயலாளர் பிலிங்கம் வேலை அறிக்கையைச் சமர்ப்பித்தார். கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.ராமசாமி நிறைவுரையாற்றினார்.

இதில் மாவட்டச் செயலாளராக எஸ்.செந்தில்குமார் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநாட்டில் மூத்த தோழர்கள் காதர் முகையதீன், ஆதிமூலம், பாலச்சந்திரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். சிவகாசியின் தாலுகா செயலாளராக இருந்து மறைந்த தோழர் ஜீவாவின் குடும்பத்தாருக்குக் கட்சியின் சார்பாக ரூ.50,000 குடும்ப நிதி வழங்கப்பட்டது.

இம்மாநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுபாண்டியன், மாவட்டக் குழு உறுப்பினர் பாலமுருகன், முன்னாள் எம்.பி.அழகிரிசாமி, விருதுநகர் நகரச் செயலாளர் பாண்டியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம் இ.குமாரலிங்கபுரம் என்ற இடத்தில் ஜவுளிப் பூங்கா பணிகளை விரைந்து முடித்திட வேண்டும், விருதுநகர் ரயில்வே நிலையத்தில் சென்னை, நாகர்கோவில் வந்தே பாரத் ரயில் நின்று செல்ல வேண்டும்,

விருதுநகரில் உள்ள மாவட்ட மருத்துவமனையில் கூடுதல் வசதிகள் செய்து தர வேண்டும். விருதுநகரில் உள்ள கௌசிகா நதியை மக்களின் பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சி நோக்கத்திற்குப் பயன்படும் அளவில் மேம்படுத்த வேண்டும். வருசநாட்டு மலைப்பாதைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். விவசாயத்தை மற்றும் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தக் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# விருத்தாச்சலத்தை மையமாக வைத்துப் புதிய மாவட்டம்

## கடலூர் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





கட்சியின் கடலூர் மாவட்ட 24 வது மாநாடு மற்றும் பேரணி, பொதுக்கூட்டம் திட்டக்குடியில் நடைபெற்றது. பேரணியை மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்கி வைத்தார். பொதுக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் பி.துரை தலைமை தாங்கினார். மங்களூர் ஒன்றியச் செயலாளர் எம்.நிதி உலகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். நல்லூர் ஒன்றியச் செயலாளர் வி.கடவுள்(எ) கோவிந்தராசு முன்னிலை வகித்தார்.

தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் டி.மணிவாசகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.குளோப், வி.எம்.சேகர், மாவட்டப் பொருளாளர் எம்.கே.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆர்.சுப்பிரமணியன், வி.பி.முருகையன், ஆர்.சக்திவேல், ஏ.கே.சுப்பிரமணியன், எஸ்.குணசேகரன், டி.கே.பன்னீர்செல்வம், ஜெ.சிவகுமார் உள்ளிட்டோர் பேசினார்கள். நகரச் செயலாளர் செல்வராசு நன்றி கூறினார்.

பிரதிநிதிகள் மாநாட்டில் கட்சியின் செங்கொடியை தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி ஏற்றினார். மாநாட்டுத் தலைமைக் குழுவாக மாவட்ட நிர்வாகக் குழு ஆர்.சுப்பிரமணியன், மாவட்டக் குழு மல்லிகா செயல்பட்டனர்.

மாநாட்டில் மீண்டும் மாவட்டச் செயலாளராக பி.துரை தேர்வு செய்யப்பட்டார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களாக டி.மணிவாசகம், பி.துரை, வி.குளோப், வி.எம்.சேகர், என்.கே.பாஸ்கர், ஆர்.சுப்பிரமணியன், வி.பி.முருகையன், ஆர்.சக்திவேல், ஜெ.சிவகுமார், எஸ்.குணசேகரன், ஏ.கே.சுப்பிரமணியன், டி.கே.பன்னீர்செல்வம், லட்சுமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கடலூர் மாவட்டத்தைப் பிரித்து விருத்தாச்சலத்தை மையமாக வைத்துப் புதிய மாவட்டம் அறிவிக்க வேண்டும்.

திட்டக்குடி வெளிங்டன் ஏரி பராமரிப்புக்குத் தமிழக அரசு ரூபாய் 130 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது உடனடியாக ஏரியைத் தூர்வாரி சுற்றியுள்ள ஆக்கிரப்புகளை அகற்றி, கரையைப் பலப்படுத்தி, கான்கிரீட் கரை அமைக்க வேண்டும்.

பண்ருட்டியில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்திட வேண்டும். முந்திரி பழத்தை மதிப்பு கூட்டப்பட்ட பானம் தயாரிக்கும் பழச்சாறு தொழிற்சாலையை அமைத்திட வேண்டும்என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை உடனடியாகத் திறக்க தென்காசி மாவட்ட மாநாடு வலியுறுத்தல்





கட்சியின்தென்காசிமாவட்ட2வதுமாநாடு 29, 30 ஆகிய நாட்களில் சங்கரன்கோவில் நகரில் நடைபெற்றது. ஜூன் 29 மாலை பேரணிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன், ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் த.அறம், திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன், தென்காசி மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஜூன் 30ம் தேதி மாநாட்டுக் கொடி ஏற்றப்பட்டு, பிரதிநிதிகள் மாநாடு தொடங்கியது. மாவட்டம் முழுவதிலும் இருந்து கொண்டுவரப்பட்ட தியாகிகள் நினைவு ஜோதி பெறப்பட்டு, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற மாநாட்டில் தென்காசி மாவட்டச் செயலாளராக த.இசக்கித்துரை தேர்வு செய்யப்பட்டார்.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புச் சட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முறையாக வேலை கொடுத்து, அவர்களுக்கு வழங்க வேண்டிய கூலிக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்டுத் திறக்கப்படாத நிலையில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை உடனடியாகத் திறக்க வேண்டும். தென்காசி மாவட்டத்திற்குத் தனிப் பேரூராட்சி உதவி இயக்குனர் அலுவலகம் உருவாக்கப்பட வேண்டும்.

தென்காசியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை, மருத்துவக் கல்லூரியுடன் கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் அரசு கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளைக் கொண்டுவர வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்கரன்கோவில் தாலுகா செயலாளர் ஏ.பழனிமுருகன் நன்றியுரை ஆற்றினார்.

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.

16 ஜூலை 13 ஜூலை 19 2025 **ஜனசக்தி**

JANASAKTHI TAMIL WEEKLY CELL: 9444331138
DAY OF PUBLICATION: EVERY THURSDAY

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# கள்ளக்குறிச்சி மாவட்ட 2வது மாநாடு






கட்சியின் கள்ளக்குறிச்சி மாவட்ட 2வது மாநாடு ஜூலை 5, 6 தேதிகளில் திருக்கோவிலூரில் நடைபெற்றது. பேரணி, பொதுக்கூட்டம் திருக்கோவிலூர் பேருந்துநிலையம் அருகில் நடைபெற்றது. மாவட்டம் முழுவதிலும் இருந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள் சீருடை அணிந்து கலந்து கொண்ட பேரணி மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்குக் கட்சியின் மாவட்டச்செயலாளர் கே.ராமசாமி தலைமை வகித்தார். திருக்கோவிலூர் ஒன்றியச் செயலாளர் ரவி வரவேற்புரை நிகழ்த்தினார். கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் ந.பெரியசாமி, மு.வீரபாண்டியன், மாநிலக் குழு உறுப்பினர் பா.தினேஷ், முன்னாள் மாவட்டச் செயலாளர் ஏ.வி.சரவணன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

பிரதிநிதிகள் மாநாட்டுக் கொடியை முன்னாள் மாவட்டச் செயலாளர் ஏ.வி.சரவணன் ஏற்றி வைத்தார். பிரதிநிதிகள் மாநாட்டில் நடைபெற்ற வேலை அறிக்கைகள் வரவு செலவு அறிக்கைகள் முன்மொழியப்பட்டன. மாநாட்டில் 37 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டச் செயலாளராக கே.ராமசாமி, மாவட்டத் துணைச் செயலாளராக ஏ.சுப்பிரமணி, கே.எஸ். அப்பாவு, மாவட்டப் பொருளாளராக எம்.கலியபெருமாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகளை அரசு உருவாக்க வேண்டும்

## அரியலூர் மாவட்ட மாநாடு வலியுறுத்தல்






இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரியலூர் மாவட்ட 4வது மாநாடு 2025 ஜூலை3, 4 ஆகிய இரண்டு நாட்கள் மாவட்டத் தலைநகர் அரியலூரில் நடைபெற்றது.

திருச்சி பாரதி கலைக்குழு கலைஞர்கள், காந்தி தலைமையிலான குழுவினர்களின் சிறப்பான எழுச்சியுடன் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சொ.ராமநாதன் தலைமை வகிக்க, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் டி.தண்டபாணி வரவேற்புரை ஆற்றிட, அரியலூர் ஒன்றியச் செயலாளர் து.பாண்டியன் முன்னிலை வகிக்க நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மு.அ.பாரதி, முன்னாள் மாவட்டச் செயலாளர் இரா.உலகநாதன் உள்ளிட்டோர் உரையாற்றினர். 500க்கும் மேற்பட்ட தோழர்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரியலூர் தோழர் எம்.செல்வராசு எக்ஸ் எம்.பி நினைவரங்கத்தில் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. தலைமைக் குழு தோழர்களாக ஜி.ஆறுமுகம், இ.முருகேஸ்வரி மாநாட்டினை வழி நடத்தினர்.

மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி மாநாட்டினைத் துவக்கி வைத்து உரையாற்றினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மு.அ.பாரதி, கட்சிக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பெரம்பலூர் வீ.ஞானசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வை.சிவபுண்ணியம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநாட்டு நிறைவுறையாற்றினார்.

மாநாட்டில் 15 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளராக கே.நடராஜன், துணைச் செயலாளராக டி.தண்டபாணி, பொருளாளராக ஜி.ஆறுமுகம் ஆகிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் பாதிக்கு மேற்பட்ட விளைநிலங்களை மெகா சிமெண்ட் ஆலைகளால் விலைக்கு வாங்கப்பட்டு, விவசாயம் இல்லாத நிலையில், புதிய தொழில்களை அரசு உருவாக்கி வேலைவாய்ப்பை உத்திரவாதம் செய்திட வேண்டும்.

கொள்ளிடம், மருதை ஆற்றில் தேவையான இடங்களில் மதகுடன் கூடிய தடுப்பணை கட்டப்பட வேண்டும், இரண்டு கரையோரங்களிலும் ஆக்கிரமிப்பை அகற்றிக் கரையைப் பலப்படுத்த வேண்டும்.

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உரிய சிகிச்சை வசதிகள், சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அரியலூரில் இருந்து கும்பகோணம், தஞ்சை, சேலம் புதிய இணைப்பு ரயில் பாதைத் திட்டம் துவங்கப்பட வேண்டும்.

# கரூர் மாவட்ட 10வது மாநாடு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்ட 10வது மாநாடு, கரூர் உழவர் சந்தை அருகில், 18.06.2025 அன்று, ஆர்.சிவசண்முகசுந்தரம், எம்.பி.செல்வம், கே.கலாராணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டைத் துவக்கி வைத்து, கே.சுப்பராயன் எம்.பி இன்றைய அரசியல் நிலை குறித்துப் பேசினார். மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன் வேலை அறிக்கை வாசித்தார்.

பின்னர் 27 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டனர். கே.கலாராணி மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநிலச் செயற்குழு உறுப்பினர் திருப்பூர் ரவி, தேசியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் வாழ்த்திப் பேசினார்கள். மாவட்டச் செயலாளர் கே.கலாராணி நன்றி கூறினார். முதல்நாள் மாலை 6.00 மணியளவில் காமராஜர் சிலை அருகில் இருந்து பேரணி புறப்பட்டு, உழவர் சந்தை அருகில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பேரணியில் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.